# பாப்பரசரைப் படுகொலை செய்ய முயற்சி! இளைஞன் கைது!!

விஸ்பன், மே, 13.

போர்த்துக்கலில் சுற்று ' பிரயாணம் மேற்கொண்டுவரும் பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரை இன்று படுகொலைசெய்ய முயன்ற தீவிரவாத இளைஞரொருவரைப் பாதுகாப்பு அதிகாரிகள் மடக்கிப்பிடித்தனர்!

போர்த்துக்கல்லிலுள்ள 'பாத்திம' கத்தோலிக்க தேவாலயத்தில் வைத்தே இக் கொலைமுயற்சி மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஜோன் பெர்ணன்டஸ் என்ற 3? வயது இளைஞரே பாதிரி போன்று உடையணிந்து, நீண்ட கத்தியொன்றினல் பாப்பரசரைக் கொலைசெய்ய முயன்றபோது பாதுகாப்பு அதிகாரிகளினல் இளைஞர் மடக்கிப் பிடிக்கப்பட்டதாகக் கூறப் பட்டது

இரண்டு மணித்தியாலங்களாகப் பொலிசாரினல் விசாரணை செய்யப்பட்ட இவர், பாப்பரசரைக் கொலைசெய்யும் நோக்கத்தை தான்கொண்டிருந்தாரென்றும் தெரிவித் துள்ளதாகக் கூறப்பட்டது. பாப்பரசர் மீது கடந்த வருடமும் மே 13 ல் துருக்கி இளைஞரினல் கொலைமுயற்சிமேற் கொள்ளப்பட்டது தெரிந்ததே. [வெ]


விலை ரூபா 1-00

ஈழநாடு

THE EELANADU

மலர் 24 சித்திரை 31 றஜப் 19 இதழ் 90

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 14—5—82


## அமைச்சர் மத்யூ காங்கேசன்துறை விஜயம்

[மாவிட்டபுரம்]

கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில்மத்யூ நேற்று நண்பகல் அநுராதபுரத்திலிருந்து காரில் காங்கேசன்துறையை வந்தடைந்தார்.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை விருந்தினர் விடுதியில் தங்கியுள்ள அமைச்சர் மத்யூ நேற்று மாலை தொழிற்சாலையின் மூன்றும் கட்ட வேலைப்பிரிவு அலுவலகத்திற்கு விஜயம்செய்து,

(8ம் பக்கம் பார்க்க)

### 387நாட்கள் இராணுவ முகாமிலிருக்கும் யாழ்.பல்கலைக்கழக மாணவன்

# விமலராஜாவை விடுவிக்குமாறு

# இன்றுபகிஷ்கரிப்பு

## யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை பரந்த அளவில் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

முந்நூற்று எண்பத்தேழு நாட்களாக விசாரணையின்றி இராணுவ முகாமில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் யாழ். பல்கலைக் கழக விஞ்ஞானபீட மாணவன் ஏ. விமலராஜாவை விடுதலைசெய்யக்கோரி யாழ். பல்கலைக் கழக மாணவர் அவை இன்று பரந்த அளவில் பகிஷ்கரிப்பு நடத்துகிறது.

பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் பகிஷ்கரிக்குமாறு மாணவ, மாணவிகளை யாழ் பல்கலைக் கழக மாணவர் அவை துண்டுப் பிரசுரம் மூலம் கோரியுள்ளது.

மாணவன்ஏ. விமலராஜா, கடந்தவருடம் ஏப்ரல் மாதம் 24ம் திகதி அதிகாலை ஆயுதப் படையினரால் கைதுசெய்யப் பட்டார்.

## கொழும்பு, மட்டக்களப்பிலும் இன்று பகிஷ்கரிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக் கழக மாணவர்களின் பகிஷ்கரிப்புக்கு முழு ஆதரவுதெரிவித்து வந்தாறுமூலை பல்கலைக் கழக கல்லூரி மாணவர்கள், கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்கள் பகிஷ்கரிப்பில் இன்று ஈடுபடுவார்கள் என்று யாழ். பல்கலைக் கழக மாணவர் அவைத் தலைவர் திரு. கே. என். இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் தமிழ் மாணவர்களையும் இளைஞர்களையும் கைதுசெய்து இராணுவமுகாம்களில் சித்திரவதை செய்வதை உடன் நிறுத்தும்படியும், யாழ் பல்கலைக் கழக விஞ்ஞானபீட மாணவன் விமலராசாவை விடுதலை செய்யக்கோரியும் யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் 2,200 பேர் நேற்றுமுன்தினம் தொடக்கம் தங்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்துவருகின்றனர்.

கொழும்பு பல்கலைக் கழக மாணவர்களும்பகிஷ்கரிப்புக்கு ஆதரவு தெரிவிக்குமுகமாக இன்று காலை தமது வகுப்புகளை அரைநாள் பகிஷ்கரிக்கப்போவதாக மாணவர் அவைத் தலைவர் திரு. டி. ரி. நமசேவா, யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவருக்கு தந்தி மூலம் அறிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக் கழக மாணவர்களின் பகிஷ்கரிப்பு இம்மாதம் 15ம் திகதிவரை நடைபெறும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

'வதைக்காதே' என்ற தலைப்பில் மும்மொழிகளிலும் அ. விமலராசாவின் உருவப்படம் தாங்கிய பிரசுரம் ஒன்றையும் யாழ். பல்கலைக் கழக மாணவர் அவை வெளியிட்டுள்ளது. (மா

## யாழ். அபிவிருத்திச் சபை இன்று கூடுகிறது

[யாழ்ப்பாணம்]

யாழ்.மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டம் யாழ்.செயலகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சபா மண்டபத்தில் சபைத்தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் இன்று முற்பகல் நடைபெறவிருக்கிறது.

ஏப்ரல் 27ம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்று, அக் கூட்டத்தில் எடுக்கப்படாத விஷயங்கள் இக் கூட்டத்தில் எடுத்தாளப்படவிருக்கின்றன.

நேற்று முன்தினம் யாழ். மாவட்டசபையின் வரலாற் புகழ்மிக்க வைபவ அமர்வு நடைபெற்றது தெரிந்ததே.

இன்றுநடைபெறும் கூட்டத்தில், தீவுப்பகுதி எம்.பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், திருவாளர்கள் ஆ. நடராசா, சு. நடேசு, ந இராஜேந்திரன், மு. தம்பிமுத்து ஆகியோரின் பிரேரணைகள் விவாதத்துக் கெடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன. [மா]

## மாலினி மரணம் இன்று விசாரணை

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவு உப்பளக் கூட்டுத்தாபனத்தின் விடுதியில் மர்மமானமுறையில் மரணமான மாலினி மகேந்திரனின் மரண விசாரணை இன்று யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் தொடர்ந்து நடைபெறும்.

## "இரவும் பகலும் என்னைத் தொடர்ந்து தாக்கினார்கள்"

### தேவன் சாட்சியம்

(கொழும்பு)

'ஆனையிறவு தடுப்புமுகாமில் வைத்து ஏ. எஸ். பி. குணசிங்கா குட்டிமணியை பொல்லொன்றினல் தாக்கிக் கொண்டிருந்தபோது, நான் திரும்பிப்பார்த்தபோது எனக்கும் அடிவிழுந்தது இத்தாக்குதல் பகலில சில தடவைகள் மாத்திரம் நடைபெறும் ஆனல் இரவு நேரங்களில் தாக்குதல் தொடர்ந்து நடைபெறும்''

இவ்வாறு நீர்வேலி வங்கிக் கொள்ளை தொடர்பாக பனாகொடை இராணுவமுகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள செல்லத்துரை சிவசுப்பிரமணியம் எனப்படும் தேவன் கான்ஸ்டபிள் சிவநேசன் கொலைவழக்குத் தொடர்பாக நேற்று சாட்சிமளிக்கையில் தெரிவித்தார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. டியூடர் டி அல்விஸ் முன்னிலையில் நடைபெற்றுவரும் இவ்வழக்கில் தேவன் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தெரிவிதததாவது;–

'என்னை அதிகாரி ஒருவர் மலசலகூடப்பக்கம் அழைத்துச் சென்றபோது அங்கு குட்டிமணி சரிந்தநிலையில் கால்கள் பிணைக்கப்பட்டுக் கிடந்தார். அவர் கண்களைத் திறக்கமுடியாத நிலையில் ஐயோ, ஐயோ என்று கத்தியபடி கிடத்தார்.

'இன்ஸ்பெக்டர் கணேசம குட்டிமணியின் கால்களை அவிழ்த்தார். பின்னர் எனது காற்சட்டையைக் கழற்றி அதனல் எனது கால்களைக் கட்டி, குட்டிமணியைக் கட்

[8-ம் பக்கம் பார்க்க]

## தமிழ் அரசர் காலத்துக் கோட்டை மந்துவில் பகுதியில் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழரசர் காலத்தைச் சேர்ந்ததெனக் கருதப் படும் கோட்டை ஒன்று யாழ்ப்பாணத்தில் மந்துவில் பகுதியில் காணப்படுவதாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரணிக்கு அண்மையிலுள்ள மந்துவிலில் 'தல்வளை' என்னும் இடத்தில் சுமார் 15 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப் பரப்பில், செங்கட்டிகள், பொழிந்த வெள்ளைக் கற்கள், மற்றும் காட்டுக்கற்களாலாகிய பெரிய கோட்டை ஒன்றின்சிதைவுகள்காணப்படுகின்றன. இங்கு காணப்படும் இடிபாடுகள் பற்றி 1921ம் ஆண்டு சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய குறிப்பொன்றை ஆதாரமாகக் கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் விரிவுரையாளர் பொ இரகுபதியுடன் வ. தேவராஜ், ம. இ செல்வின், க. மல்லிகா ஆகியோர் நடாத்திய மேலாய்வொன்றின்மூலம் பல தகவல்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. தல்வளை கோட்டையுடன் 'சங்கிலியாதிடல்' பங்குளிப்பிட்டி வேரக்காடு ஆகிய இடங்களும் ஆய்விற்குள்ளாகின

யாழ்ப்பாணத்தில் தமிழரசர் காலத்திற்குரிய கட்டடச் சான்றுகள் அழிந்தொழிந்து போயினவே என்று ஆதங்கப் படும் வரலாற்றாசிரியர்கட்கு

(8—ம் பக்கம் பார்க்க )

### மணிவாக்கு

வீடுடைத்து உள்ளே நுழைகிறவர்களைப் பற்றியே எல்லோரும் பேசுகிறார்கள். ஆனால் வீட்டை உடைத்துக்கொண்டு வெளியில் ஓட விரும்புகிறவர்களும் கூட இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடுகிறோம்.

—தோன்ட்ரன் வைல்டர்

# நமது நோக்கு

## அமைச்சரின் ராஜினாமா

இப்படித்தான் நடந்திருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட ஒருசம்பவம் நேற்றுமுன்தினம் நடந்தேறியுள்ளது.

அது வேறொன்றுமில்லை. அமைச்சர் பதவியிலிருந்து திரு. ஈ. எல். சேனநாயக்கா ராஜினாமா செய்துள்ளதையே குறிப்பிடுகின்றோம்.

விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சர் பதவியிலிருந்து மாறி சுகாதார அமைச்சராகப் பதவி ஏற்றுக்கொண்ட ஒருவாரத்துக்குள் திரு. சேனநாயக்கா தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இந்த ராஜினாமாவுக்கான காரணம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப் படாவிட்டாலும் பொதுமக்கள் மத்தியில் பல்வேறுவிதமான கதைகள் அடிபடுகின்றன.

குறிப்பாகச் சொல்வதானால் விவசாய அமைச்சில் ஏற்பட்டுவிட்ட சில தில்லுமுல்லுகளின் உச்சவிளைவே இந்த ராஜினாமா எனலாம்.

எம்மைப்பொறுத்தவரை விவசாய அமைச்சில் என்று சந்தேகத்துக்கிடமான விதத்தில் காரியங்கள்இடம்பெற்ற விஷயம் அம்பலத்துக்கு வந்ததோ அப்பொழுதே அமைச்சர் தம் பதவியை ராஜினாமாச் செய்திருக்கவேண்டும். அதன்மூலம் அவர் தம் நிலையைத் தூய்மைப்படுத்திக் கொண்டிருக்கமுடியும். ஆனால் சிக்கலுக்கு மேல் சிக்கல்கள் பின்னிப் பிணைந்து கடைசியில் ஏற்றுக்கொண்ட புதிய அமைச்சர் பதவியையும் கைவிட்டுவிட்டு பாராளுமன்றத்தில் பின் ஆசன உறுப்பினர்களுடன் அமரவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சராக திரு. ஈ. எல். சேனநாயக்கா பதவி வகித்துள்ளார்.

சில காலத்துக்குமுன் விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சித்துறை அமைச்சின்மூலம் பல லட்சம் ரூபாய் பெறுமதியான 'டெண்டர்'கள் வழங்கப்பட்டதில் ஊழல்கள் இடம்பெற்றிருப்பதாக சந்தேகங்கள் கிளம்பியிருந்தன. இது பற்றி அமைச்சரவை செயலாளர் திரு. ஜி. வி. பி. சமரசிங்கா ஆராய்ந்து அறிக்கை ஒன்றை அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்தார். இதையடுத்து ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையில் பிரதமமந்திரி திரு ஆர். பிரேமதாசா, அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரம ஆகியோரைக்கொண்ட அமைச்சரவை உபகுழுவொன்று விசாரணை நடத்தியது. இது முடிவடைவதற்குமுன்னரே அமைச்சின் செயலாளர் திரு. ரஞ்சன் விஜயரத்னவை அமைச்சர் கட்டாய லீவில் அனுப்பியுள்ளதாக செய்தி வந்தது. அதேசூட்டில் அவர் தொடர்ந்தும் அப்பதவியிலேயே இருக்கிறாரென ஜனாதிபதி அலுவலகம் அறிவித்தது.

இதற்கிடையில் திரு. சேனநாயக்க சுகாதார அமைச்சராகவும் திரு. காமினி ஜயசூரியா விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி அமைச்சராகவும் பதவுப் பிரமாணங்கள் எடுத்துக்கொண்டனர்.

தமக்கு விருப்பமான ஒரு பதவியை ஜனாதிபதி வழங்கிருப்பதாக திரு. சேனநாயக்க பாராளுமன்றத்திலும் அறிவித்தார். மேற்கொண்டும் விபரங்களை அவ்வப்போது பாராளுமன்றத்துக்குத் தெரிவிப்பதாக அவர் கூறியிருந்தார். புதிய பதவிக்கு தேவ ஆசீர்வாதம் பெறுவதற்காக கதிர்காமத்துக்கும் கூட அவர் சென்று வந்ததாகக் கூறப்பட்டது.

இந்த நிலைமையில் மந்திரி சபை உப கமிட்டியின் முடிவு வெளிவந்தது. டெண்டர் வழங்கியதில் ஒழுங்கீனம் இடம்பெற்றுள்ளது. அமைச்சரவை நடைமுறைகள் கைக்கொள்ளப்படவில்லை. என்றாலும் ஊழல் இடம்பெற்றிருக்கவில்லை, ஊழல் நடைபெற்றதற்கான அறிகுறியும் இல்லை என அறிவிக்கப்பட்டது.

அமைச்சரவையினால் விதிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் கைக்கொள்ளப்படவில்லை என்ற நிலைமை உருவானவுடனேயே அமைச்சர் ராஜினாமா செய்திருப்பாரானால் நிலைமை வேறு விதமாக அமைந்திருக்கும். ஆனால் அதற்கு பதில் அமைச்சின் செயலாளர் தமது பதவியை ராஜினாமா செய்தார். தமது முன்னாள் உதவி [illegible]ளர் ஒருவர் செய்த தவறுக்குத் தாமே பொறுப்பேற்பதாக அவர் அறிவித்தார்.

புதிய பதவியில் அமர்ந்ததின் காரணமாக [illegible]பு வகித்த அமைச்சில் ஏற்பட்ட தவறுகளுக்கு தம் பொறுப்பில்லை என்று அமைச்சர் தட்டிக் கழித்துவிடமுடியாது என்பது ஒருபுறமிருக்க, ஒரு அமைச்சில் —அமைச்சரவை நடைமுறைகளைப் புறக்கணிப்பது போன்ற — தவறுகள் முழு அமைச்சரவையையுமே பாதிப்பதாகும்.

இதன் அடிப்படையிலேயே சில தினங்களுக்கு முன் நடந்த அமைச்சரவை கூட்டத்தில் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றிருக்கவேண்டும் என ஊகிக்கலாம்.

திரு. சேனநாயக்காவின் ராஜினாமா மிகவும் பிந்தியே இடம்பெற்றிருந்த போதிலும் இது சரியான — வரவேற்கத்தக்க நடவடிக்கையென்றே கருதவேண்டும்.

பொதுவாழ்வில் ஊழல் — ஒழுங்கீனங்களை ஒழித்து சீரான முன்மாதிரிகளை ஏற்படுத்த விரும்பும் ஜனாதிபதியின் கையை இது பலப்படுத்துவதாய் இருக்கும்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்துச் செய்க

## யாழ். கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச் சட்டம் உடனடியாக ரத்துச்செய்யப்படவேண்டுமென அரசைக் கோரும் தீர்மானம் ஒன்று, இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியின் யாழ் மாவட்டக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டம் மாவட்டச் செயலாளர் திரு. பொன். குமாரசாமி தலைமையில் நடைபெற்றது.

இத்தீர்மானத்தின் விபரம் வருமாறு:

இச்சட்டத்தின் கீழ் பல பிரசைகள் எவ்விதக் காரணமும் காட்டப்படாது, கைது செய்யப்பட்டுக் காலவரையின்றித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இப்படிக் கைது செய்யப்பட்டவர்களுக்குக் குற்றச்சாட்டுக்கள் இதுவரை கொடுக்கப்படவுமில்லை. நீதிமன்றங்களில் ஆஜர்செய்யப்படவுமில்லை. இவை மனித உரிமைகளுக்கு நேர்விரோதமானவை ஆகவே இவர்கள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்.

மாமூலான நிலையைத் தமிழ்ப் பிரதேசங்களில் உருவாக்குவதற்கு இராணுவம் உடனடியாகத் தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து வாபஸ்பெறப்படவேண்டும். அத்துடன் தேசியச் சிறுபான்மையின்ருடைய அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச்சர்வகட்சிமாநாட்டை உடனடியாக எவ்வித நிபந்தனையுமின்றிக் கூட்டவேண்டும்.

(மா—இ)

# மக்கள் கருத்து

## இந்த பஸ்சேவையை மாற்றுதீர்

கிளிநொச்சிக்கு செம்மணி நல்லூர் ஊடாகச் சேவையில் ஈடுபட்ட பஸ்ஸை, கண்டி வீதி வழியாகச் சேவையில் ஈடுபடுத்த எடுத்துள்ள முடிவு பிரயாணிகளைப் பெரிதும் பாதிக்கும்.

நல்லூரிலுள்ள கல்விக் கந்தோர், நீர்வளச்சபை, நல்லூர் கந்தசாமி கோவில், நாகவிகாரை மற்றும் பல தனியார் தொழிற்சாலைக்குச் செல்வோர் இச்சேவை மாற்றத்தினால் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

இச்சேவை கண்டி வீதி ஊடாக நடத்தப்பட்டால் கிளிநொச்சி, சாவகச்சேரியிலிருந்து வரும் அதிபர்கள், ஆசிரியர்கள் யாழ். பஸ்நிலையத்திற்கு வந்து, மீண்டும் மற்றொரு பஸ் எடுத்து, முத்திரைச் சந்தைக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்படும். இதனால் தங்கள் அலுவல்களைக் கவனிக்க ஒரு முழு நாளைச் செலவளிக்க வேண்டி ஏற்படுமாதலால், மாணவர்களின் கல்வியையும் பெரிதும் பாதிப்பதாக இருக்கும்.

மேலும் இன்னும் இருமாதங்களில், நல்லூர்க் கந்தசாமி கோவில் உற்சவம் ஆரம்பிக்கவிருப்பதால், தென்மராட்சியிலிருந்து வரும் பக்தர்கள், குறிப்பாக வயோதிபத் தாய்மார்கள், சிறு குழந்தைகள் யாழ். பஸ்நிலையம் வந்து மற்றொரு பஸ் எடுத்து நல்லூருக்கு வரவேண்டிய நிலை ஏற்படும்.

மற்றும் தென்மராட்சி, கிளிநொச்சி செல்லும் இருபாலை, கல்வியங்காடு, திருநெல்வேலி மக்கள் இதுவரைகாலமும், முத்திரைச் சந்தையிலிருந்தே தங்கள் பிரயாணத்தை மேற்கொண்டனர். புதிய திட்டப்படி கிளிநொச்சி பஸ் கண்டி வீதி ஊடாக செல்லும் நிலை ஏற்பட்டால், இவர்கள் யாழ். பஸ்நிலையம் வந்தே பஸ் எடுக்கவேண்டிய நிலை ஏற்படும்.

கண்டி வீதியால் பல பஸ்கள் சேவையாற்றி வருகின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம், சாவகச்சேரி, சோதீவு அரியாலை பஸ்களும் மற்றும் கிளிநொச்சி / முல்லைத்தீவு போன்ற தூரஇடபஸ்களும் கச்சேரி வழியாகக் கண்டிவீதியால் சேவையிலீடுபட்டுள்ளன அதுமட்டுமன்றிக் கச்சேரிக்கும் தனியான பஸ் சேவை உண்டு.

இந்தநிலையில் செம்மணி, நல்லூர் ஊடாகச் செல்லும் இந்தக் கிளிநொச்சி டிப்போ பஸ்ஸைத் தொடர்ந்து அதே வழியால் சேவையில் ஈடுபடவைக்குமாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவரைக் கேட்டுக்கொள்கிறோம்.

வி. ஐயாத்துரை

நல்லூர்.

# பாராளுமன்ற அமர்வு:

# அங்கும் - இங்கும்

- 'பேனா' -

புதிய பாராளுமன்றம் வைபவ ரீதியாகத் திறக்கப்படுவதற்கு முன்னர் அங்குசென்று பார்வையிட்ட பத்திரிகையாளர்கள் தங்களுக்குப் போடப்பட்டுள்ள இருக்கைகள் எழுதுவதற்கும் — குறிப்பெடுப்பதற்கும் கூட வசதியாய் இல்லையென்று முறையிட்டனர். உடனடியாகவே அதிகாரிகள் அதைக் கவனித்து பத்திரிகையாளர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்துவிட்டார்கள்.

வைபவ ரீதியிலான முதல் அமர்வுக்கு சென்ற பத்திரிகையாளர்கள் வழமைபோலவே தங்கள் சாதாரண உடையில் சமூகம் அளிக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

சபை உறுப்பினர்களுக்கும் சபையின் அலுவல்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கும் மாத்திரமே குறிக்கப்பட்ட உடை சம்பிரதாயம். பெரும்பாலும் எல்லாருமே தேசிய உடையில் சமூகம் அளித்திருந்தனர்.

ஆனால் நாம் இன்னமும் அந்நிய ஏகாதிபத்தியத்தின் மிச்சம் சொச்சங்களிலிருந்து விடுபடவில்லையே! அதனால் மேல்நாட்டு சூட்டும் கோட்டும் நம்மை விட்டு அகன்றுபோக மறுக்கிறது. அது மறுத்தாலும் நாம் விடுவதாக இல்லை.

* * *

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நமது குட்டிப் பாராளுமன்றம் வைபவ ரீதியாக தன் அமர்வை நடத்தியது. பெரும்பாலான சம்பிரதாயங்கள் கொழும்புப் பாராளுமன்றத்தையே 'காப்பி' அடிப்பதாக இருந்தன. ஒரு சிலவற்றைத் தவிர.

இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் நமது பாரம்பரிய சம்பிரதாயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியம். நந்திச் சின்னம், யாழ்சின்னம், தமிழ் வாழ்த்து போன்ற ஏற்பாடுகள் வரவேற்கத்தக்கவை.

உறுப்பினர்கள் அனைவருமே தமிழ்த் தேசிய உடையில்காட்சியளித்தது ஒரு சிலர் சால்வையை மறந்துவிட்டாலும் மகிழ்ச்சியளிப்பதாகும். இது தொடர்ந்து வரும் கூட்டங்களிலும் கடைப்பிடிக்கப்படுமானால் இரட்டிப்பு மகிழ்ச்சி.

'கோர்ட் சூட்டோடு' நீதிமன்றங்களுக்குச் செல்லும் சட்டத்தரணிகளான உறுப்பினர்கள் அவசரமாக சபைக்கு வரநேரும் போது தேசிய உடை தரிப்பது சங்கடமாக இருக்கலாம். ஆனால் நீதிமன்றங்க

(8-ம் பக்கம் பார்க்க)

# பருத்தித்துறை புலோலி பசுபதீஸ்வரர் ஆலயம்

இலங்கையின்சிரம்போல் விளங்குவது யாழ்ப்பாணம். இதன் வடபால் உள்ளது பருத்தித்துறை. இப்பெருநகரின் திலகமாக அமைந்துள்ள மாபெரும் க்ஷேத்திரம் எமது பசுபதீஸ்வரன் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இவ்வாலயமாகும். முன்பு பருத்தித்துறை பெருநகரும், புலோலி என்னும் பெயருடன் அடங்கியதால் இவ்வாலயம் புலோலி பசுபதீஸ்வரன் என்று அழைக்கப்படுகின்றது. பின்பு அரசியல் காரணங்கள்கொண்டு ஆங்கிலேயர் ஆட்சியில் பருத்தித்துறை என்றும், புலோலி என்றும் பிரிக்கப்பெற்றது. எனினும் ஆலயம் புலோலிக்கும் பருத்தித்துறைக்கும் எல்லையில் அமைந்துள்ளது. இங்குள்ள அம்பாளின் பெயர் பார்வதவர்த்தனி. சகல பரிவார மூர்த்திகளுடன் அமைந்துள்ள பெருமைமிக்க ஒரு சிவாலயம் இதுவாகும். மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும் அமைந்துள்ள இவ்வாலயத்தின் மேற்குப்புறத்தில் ஒரு குருசமாதி உண்டு. இச்சமாதி உண்டான வைபவம் பலருக்குத் தெரியமாட்டாது. சமாதியுடன் சேர்ந்த ஸ்தலங்கள் மிகவும் மூர்த்திகரம் வாய்ந்தவை. எமது இவ்வாலயம் சற்று ஏறக்குறைய இருநூறு வருடங்களுக்கு மேற்பட்டதாகும்.

இங்கு ஆராதிக்கப்படும் மூலமூர்த்தியான சிவலிங்கம் இந்தியாவிலிருந்து வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்திற்கு ஸ்தாபிப்பதற்காக பருத்தித்துறை துறைமுகம் மூலம் கொண்டுவரப்பட்டது. எதுவோஎதிர்பாராதகாரணத்தினால் நினைத்தமுறையில் இவ்லிங்கத்தை எடுத்துச் செல்ல முடியவில்லை. ஆனையினால் இதை இந்த ஸ்தலத்திலேயே ஸ்தாபித்தார்கள் என்றும் ஒரு கதை உண்டு. இந்தியாவின் வடபுறத்தில் உள்ள பசுபதீஸ்வரன், தென்புறத்தில் உள்ள பர்வதத்தனியை தமது சக்தியாக கொண்டருளும் பெருமையும் இங்குண்டு.

இவ்வாலயத்தின் புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் இன்று 14-ம் திகதி வெள்ளிக்கிழமை மகோன்னதமாக நடைபெற உள்ளது. அனைவரும் கண்டு பேரானந்தமடைய ஆண்டவன் அருள்புரிவாராகுக.

— (அடியான்)

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட

# இரு ஆர்ஜென்டீனு போர் விமானங்களை பிரித்தானிய ஏவுகணைகள் சுட்டுவீழ்த்தின!

## 3000 பிரிட்டன் படைவீரர்களுடன் ,குயின் எலிஸபெத்' விரைவு!

லண்டன் மே 13

**அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஆர்ஜென்டீனுவின் இரு 'ஹைகாக்' போர் விமானங்களை பிரிட்டிஷ் விமானந்தாங்கி கப்பலுக்கு பாதுகாப்பளித்த நவீன நாசகாரி கப்பலின் ஏவுகணைகள் சுட்டு வீழ்த்தின என்று பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.**

பிரிட்டிஷ் விமானம் தாங்கி கப்பலை ஆர்ஜென்டீனு விமானங்கள் குண்டு வீசி தாக்கமுற்பட்டபோதே அவ்விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டனவாம்.

இவ்விரு விமானங்களுடனும் வந்த மற்றொரு போர் விமானம் தட்பிச் சென்றுவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் விமானம் தாங்கி கப்பலுக்கோ பிரிட்டிஷ் போர் வீரர்களுக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஐ. நா. செயலாளர் நம்பிக்கை

ஆர்ஜென்டீனு பிரதி பாதுகாப்பு அமைச்சருடனும் ஐ. நா. பிரிட்டிஷ் பிரதிநிதியுடனும் தனித்தனியாக தொடர்ச்சியான பேச்சுவார்த்தை நடத்திய பின் ஐ. நா. தலைமைச்செயலாளர் போக்லண்ட் நெருக்கடிக்கு இன்னும் ஒரு வார காலத்திற்குள் தீர்வு காணப்படும் என நம்பிக்கை தெரிவித்தார்.

பத்திரிகை நிருபர்களுக்கு அவர் பேட்டியளித்துக்கொண்டிருந்த சமயமே ஆர்ஜென்டீனு விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்ட தகவல்கிடைத்தது.

இதே சமயம் பிரிட்டிஷ் ஹெலிகொப்டர் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் 4 சிப்பந்திகள் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் புவனர்ஸ் அயனர்ஸ் செய்திகள் தெரிவிக்கின்றன.

### நிருபர்கள் கடத்தப்பட்டனர்

புவனர்ஸ் அயர்சில் தங்கியிருந்த 3 பிரிட்டிஷ் டெலிவிஷன் நிருபர்கள் கடத்தப்பட்டதாகவும் பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆர்ஜென்டீனு 2 வெளிநாட்டு நிருபர்களை சீனா நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளது.

ஐ. நா. தலைமைச் செயலாளர் நடத்திவரும் பேச்சுவார்த்தை தோல்விப்படையும் பட்சத்தில் தாக்குதலை தீவிரப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை பிரிட்டன் செய்து வருகிறது. கடற்படை பலத்தை அதிகரிப்பதில் பிரிட்டன் கவனம் செலுத்தி வருகிறது.

### விம்மி அழுதவாறு வழி அனுப்பினர்

போர் சுப்பலாக மாற்றப்பட்ட பிரிட்டிஷ் ஆடம்பரக்கப்பலான 670 ஆயிரம் தொன் நிறையுள்ள 'குயின் எலிசபெத்' 3000 பிரிட்டிஷ் படை வீரர்களுடன் போக்லண்டை நோக்கி புறப்பட்டது. துறைமுகத்தில் போர் வீரர்களின் மனைவிமார், பிள்ளைகள், உறவினர்கள் விம்மி அழுதவாறு வீரர்களை வழியனுப்பி வைத்தனர். பெருந்திரளான பிரிட்டிஷ் மக்களும் துறைமுகத்திற்கு வந்து அவர்களை வழி அனுப்பினர்கள்.

போக்லண்ட் தீவுகளுக்கு அப்பால் உள்ள கடற்பகுதிகளில் ஆர்ஜென்டீனு படைகளுக்கும், பிரிட்டன் படைகளுக்கும் தொடர்ந்து விமானச் சண்டை நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [க-இ]

## றேயல் கடற்படையில் பிரி. இளவரசர் எட்வேர்ட்

லண்டன், மே. 13

பிரிட்டிஷ் மகாராணியாரின் மூன்றாவது புதல்வரான இளவரசர் எட்வேர்ட் பிரிட்டிஷ் கடற்படையில் சேரவிருக்கின்றாரென பக்கிங்ஹாம்மாளிகை அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

பதினெட்டு வயதான இளவரசர் எட்வேர்ட் றேயல் கடற்படையில் சேர்வதற்கான போதனைகளை இம்மாதப்பகுதியில் பெறஇருப்பதோடு ஏனைய கடேட் உத்தியோகத்தர்களுடன் கடற்படையில் பணியாற்றுவாரென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

இளவரசர் எட்வேர்ட் செப்டெம்பர் முதல் இரு தவணைகளுக்கு நியூஸிலாந்தில் ஆசிரியராகப் பணிபுரியவும் விருப்பம் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இளவரசர் எட்வேர்ட்டின் மூத்தசகோதரர்களான இளவரசர்கள் சார்ள்ஸ், அன்ட்ரூ ஆகியோரும் பூரண கடற்படை, விமானப்படை பயிற்சிகளைப் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

21 வயதான இளவரசர் அன்ட்ரூ போக்லண்ட் தீவுகளில் நிலை கொண்டுள்ள விமானந் தாங்கிக் கப்பல்களில் ஒன்றான எச். எம். எஸ். ஹேமிஸில் 'சீகிங்' என்ற இராட்சத ஹெலிகாப்டர்களைச் செலுத்தும் விமானிகளில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. றேயல் கடற்படையில் இவர் ஒரு ஒரு உதவி லெப்டினன்ட் ஆவார். (கி)

ஒல்லாந்தில்

## 6 அமைச்சர்கள் ராஜினுமா

லண்டன், மே. 13

**ஒல்லாந்து அரசில் தொழிற் கட்சியைச் சேர்ந்த 6 அமைச்சர்கள் ராஜினுமாச் செய்துள்ளனர்.**

3 கட்சி ஆட்சியில் இந்தநிலை ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து 2 கட்சியினரின் நிலைமைநெருக்கடி அடைந்துள்ளது.

அரசின் செலவினங்களைக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்ற முடிவில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதைத் தொடர்ந்தே 6 அமைச்சர்கள் ராஜினுமாச் செய்துள்ளனர். (க)

## "ஆயுதங்களையும் பணத்தையும் கொடுக்கும்படி குட்டிமணி கூறினுர்"

### தங்கத்துரை தொடர்ந்து சாட்சியம்

(கொழும்பு)

''ஆயுதங்கள் எங்கே? காசு எங்கே? என்று கேட்டே பொலிசார் என்னைத் தாக்கினுர்கள் நான் என்ன ஏன் அடிக்கிறீர்கள்? என்று கேட்ட போது நான் மேலும் பலமாகத் தாக்கப்பட்டேன்.

கான்ஸ்டபிள் சிவநேசன் கொலைவழக்கில் சாட்சியமளித்த தங்கத்துரை என்று அழைக்கப்படும் தொண்டமானுறைச்சேர்ந்த நடராஜா தங்கவேலு நேற்று 2-வது நாளாகச் சாட்சியமளிக்கையில் இவ்வாறு கூறினுர்

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. டியூட்டர் டி அல்விஸ் முன்னிலையில் நடைபெற்ற விசாரணையில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திரு. மாரப்பன குறுக்கு விசாரணை செய்த போது தங்கத்துரை மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

ஏ. எஸ். பி. குணசிங்கா என்னைப் பலமாகத் தாக்கினர். ஆயுதங்கள் எங்கே? பணம் எங்கே? என்று கேட்டு பொலிசார் என்னைத் தாக்கினர் என்னை அடித்துக்கொண்டிருந்த போது குட்டிமணி என்னிடம் வந்து 'ஆயுதங்களையும் காசையும் நான் கொடுத்து விட்டேன் நீயும் கொடு' என்று கூறினுர்.

''என்னிடம் காசும் இல்லை, ஆயுதமும் இல்லை ஏன் இப்படிச் சொல்கிறுய் என்னிடம் இல்லாதவற்றை நான் எப்படி கொடுப்பது? என்று கேட்டேன். அதற்கு குட்டிமணி—''பொலிசார் இப்படிச் சொல்லுமாறு கூறினுர்கள். அதுதான் சொல்கிறேன்'' என்று கூறினுர்.

ஒரு கட்டத்தில் திரு. மாரப்பணவும் எதிரிகள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. எம். சிவசிதம்பரமும் வாக்குவாதப் பட்டனர்.

மாரப்பணா:— பொலிசார் உம்மைத்தாக்கிய போது ஏன் தாக்குகிறீர்கள் என நீர்கேட்கவில்லையா?

சிவா: கடவுளே இது இலங்கையா—அல்லது வேறு நாடா?

தங்கத்துரை: ஆம் ஏன் தாக்குறீர்கள் என்று கேட்டேன்.

மாரப்பணா: அப்படிக்கேட்க முடியாது என்கிறீர்களே சாட்சி அப்படிக்கேட்டிருக்கிறுரே?

சிவா: தொடர்ந்து கேளுங்கள்...

தங்கத்துரை: ஏன் தாக்குகிறீர்கள் என்று கேட்டபோது நான் மேலும் பலமாகத் தாக்கப்பட்டேன்.

சிவா: இப்போது புரிந்ததா? அவர் கேட்டதற்குக் கிடைத்த பயனே. (ம-இ)

''பாகிஸ்தானில்

## தேர்தலுக்கான சாத்தியமில்லை''

கராச்சி, மே 13

பாகிஸ்தானில் அண்மைக்காலத்தில் தேர்தல் நடப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என பாகிஸ்தான் ஜனுதிபதி அறிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் இது தொடர்பாக கவனமாகநடந்து கொள்ளவேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். ஜனுதிபதியின் முடிவையிட்டு பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

## தேர்தலில் எலக்ரோனிக்முறை

புதுடில்லி.மே. 13

இந்திய தேர்தல் வேலைகள் விரைவில் எலக்ரோனிக் மயமாக்கப்படும் என்று பிரதம தேர்தல் ஆணையாளர் திரு. எஸ். எஸ். சத்தார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில்

## விற்பனையான டிக்கட்டுக்கு 2-ம்பரிசு!

(யாழ்ப்பாணம்)

இம் மாதம் ஆருந்திகதி இழுக்கப்பட்ட 887-வது இலக்க தேசிய சுவீப்பில் இரண்டாவது பரிசு, யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்பட்ட டிக்கட்டுக்கு கிடைத்துள்ளது.

யாழ். ஐக்கிய வியாபார சங்கத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இது பற்றி நேற்றுத் தெரிவிக்கையில் தேசிய லொத்தர் சபையின் யாழ். மாவட்ட விற்பனை ஏஜண்டாக தங்களது நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது என்றும் தாங்கள் விற்பனை செய்த டிக்கட்டுக்கே இரண்டாவது பரிசாக ரூ. 40,000 கிடைத்திருக்கிறதென்றும் இதனுடன் இரண்டு ஆறுதல் பரிசுகளும் கிடைத்துள்ளன என்றும் நீண்ட காலத்துக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்பட்ட டிக்கட்டுக்கு 2-வது பரிசு கிடைத்திருக்கிறது என்றும் கூறினுர்.

மகாஜன சம்பத சுவீப்பின் அடுத்த சீட்டிழுப்பு இம்மாதம் 3 ம் திகதி அரியாலையில் நடைபெறும்.

## எம். ஜி. ஆர். நிதி உதவி

சென்னை, மே. 13

கன்னியாகுமரி மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வன்செயலில் உயிரிழந்த நால்வர்களின் குடும்பங்களுக்கு, 10,000 ரூபாவை, முதலமைச்சர் நிதியிலிருந்து வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் முன்வந்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மண்டைக்காடு பாக்கிச் சூட்டில் பலியான 6 பேரின் குடும்பங்களுக்கு ஏற்கனவே நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. (அ)

## கியூபாவில்

வாஷிங்டன் மே. 13

கியூபாவில் சோவியத்தின் அணு ஆயுதங்களிருப்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை என அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# யாழ். பல்கலைக்கழக மாணவர் தொடர்ந்தும் பகிஷ்கரிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலை, விஞ்ஞான, நுண்கலை, மருத்துவ பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் 2,290 பேர் நேற்று 2வது நாளாக தமது வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர்.

நேற்றுமுன்தினம் மாணவர்கள் அனுவலகமாகவந்து எதிர்ப்புக் கூட்டம் ஒன்றை நடாத்தினர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத்தலைவர் திரு. கே. என். இராசநாயகம் தலைமையில் இராமநாதன் மண்டப முன்றலில் உள்ள மைதானத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு இராசநாயகம் தமது தலைமையுரையில் 81ம் ஆண்டு ஏப்ரல் 24ம் திகதி கைதுசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவரான விமலராசாவை விடுதலை செய்யும்படி வேண்டுகோள் விடுத்தார்.

''30-4-81, 10, 16, 26-3-82 ஆகியதிகதிகளில் ஜனுதிபதிக்கு தந்திகள் அடித்தும், 18-11-82ல் ஒருநாள் அடைவார் எதிர்ப்பு உண்ணுவிரத மிருந்தும், சகல கட்சிகளுக்கும் இது பற்றி அறிவித்தும் திரு. விமலராசா விடுதலை செய்யப்படவில்லை'' என்றும் அவர் கூறினுர்.

பின்வரும் தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

''தமிழ் மாணவர்களை விடுதலை செய்,

''சித்திரவதைகளை நிறுத்து;

''தமிழ் இளைஞர்களை விடுதலை செய்;

''இராணுவஅத்துமீறல்களை நிறுத்து.''

மற்றும் தமிழ்மன்றத் தலைவர் திரு. அ. சத்தியமூர்த்தி, மருத்துவபீட மாணவி செல்வி யசோதா சின்னத்தம்பி, திரு. க. விநாயகமூர்த்தி, கலைப்பீட பிரதிநிதி திரு. செ. பாலச்சந்திரன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (மா)

**யாழ். மாவட்டசபை**

# பயணத்தின் முதற்கட்டத்தைக்கூடச் சென்றடையவில்லை!

(யாழ். மாவட்ட சபையின் அமர்வு கடந்த 12-ம் திகதி நடைபெற்றபோதுசபையின் தலைவர் திரு. சு. நடராசா நிகழ்த்திய கொள்கை விளக்க உரையின் முழுவிபரத்தைஇங்கு தருகின்றோம்.)

யாழ்ப்பாண மக்களாகிய யாம், எமது மாநில சுயாட்சிக் கோரிக்கையினையிட்டு மிகத் தீவிரமாகக் குரலெழுப்பி வந்துள்ளோம். ஆட்சியில் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வது நாடு முழுவதுக்கும் நலனளிக்கும் என்னும் உணர்வினை உருவாக்குவதில் நாம் இடைவிடாது கோரிவந்த இம்மாற்றம் வெற்றி கண்டுள்ளது. இவ்வதிகாரப்பரவலாக்கத்திற்குச் சட்டவுரு அளிப்பதற்கான எத்தனங்கள் முன்பு எம்மால் மேற்கொள்ளப்பட்டன. அபிவிருத்திச்சபை அதிகாரச் சட்டத்தினைநெறிப்படுத்தி, அதன் மூலம் அதிகார மாற்றத்தில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திய பெருமை மேன்மைசால் ஜனாதிபதியையே சாரும். யாழ்ப்பாண அபிவிருத்திச் சபையைஏற்படுத்துவதற்குரிய சட்டத்தையுருவாக்கியமைக்கு யாழ்ப்பாண அபிவிருத்திச் சபையின் தலைவர் என்ற ரீதியில் அரசாங்கத்திற்கு எனது நன்றியினை நான் தெரிவிக்க வேண்டியவனாகின்றேன்.

## அதிகார மாற்றம்

இவ்வாறு பாராட்டுரையைக் கூறும் அதேநேரத்தில் இந்த அமைப்பு எவ்வளவுவலுவுடையதென்பதையிட்டு எனக்கு எவ்வித ஐயப்பாடும் இல்லை என்பதை நான் தெளிவுபடுத்தல்வேண்டும். நாம் அகமகிழ்வதற்கோ. திருப்தியடைவதற்கோ இடமில்லை. முழுமனதுடன் மக்கள் எமக்களித்த கட்டளையின் பிரகாரம் எனது கடமையினை ஆற்றும் அதேநேரத்தில் என்னைச் சூழ்ந்துள்ள தாக்கமிக்க கட்டுப்பாடுகளை நான்பூரணமாகஉணர்கிறேன். இச்சபை தனது பயணத்தின் முதற் கட்டத்தினைக்கூட இன்னும் சென்றடையவில்லையெனக் கூறுவேன். எனினும், நாம் மேற்கொண்ட ஒரு சில நடவடிக்கைகள் ஆட்சிமுறையினையிட்டுத் தெளிவான கருத்தினைப் பெற்றுக்கொள்ள எமக்குப் பெருமளவுஉதவியுள்ளன. எமது அனுபவவாயிலாகஎமக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நாம் நுணுகி மதிப்பாய்வு செய்தோம். அபிவிருத்திச் சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் வரையறை பற்றியும் அவற்றின் தெளிவான விளக்கம்பற்றியும் மேலுந் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளதென்பதை நாம் கவனத்திற்கொள்வதற்கு இம்மதிப்பாய்வு உதவிற்று. அதன் பிரதான கருவூலம்—அதாவது அதன் குறிக்கோள் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டியுள்ளது. இத்தேவையினை நன்குணர்ந்ததன் விளைவே சபையின் அதிகார வரம்பு பற்றியும், சபையின் பொறுப்புக்களின் பரிமாணம்பற்றியும் விரிவான விளக்கத்தினை நாடி ஜனாதிபதியுடன் கலந்துரையாட எம்மைத்தூண்டிற்று.

இப் பேச்சுவார்த்தைகளில் அனுகூலமேற்பட்டதோடு, அதிகாரத்திலுள்ளோர் எமது பேச்சுவார்த்தைகளின் போது நாம் கடைத்த நிலையினை நன்குணரவும் ஏதுவாயிற்று. பெருமளவுஆதரவுடன்மக்களளித்த தீர்ப்பின் மூலம் அவர்கள் வைத்த நம்பிக்கை பொய்யாகிவிடா என்பதை இச்சமயத்தில் நான் உறுதியுடன் கூறுவேன். சபை தனது பொறுப்பினை நன்குணர்ந்து மக்களின் அபிலாஷைகளை பூர்த்திசெய்யும் வகையிற் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்.

கோட்பாட்டு ரீதியில் நோக்கின், அபிவிருத்திச்சபைகள் அமைக்கப்பட்டமை நிர்வாக வளர்ச்சியில் ஒரு பிரிவெல்லையாக அமையும். அரசாங்கத்தின் அதிகாரம் ஓர் இடத்திற் குவிந்திருக்கும் காலத்திற் கொல்வாத கச்சேரி நிர்வாக முறை இன்று ஓர் அளவு மாற்றப்பட்டுள்ளது. ஆயினும் இவ்வாட்சி நிர்வாகமுறை பூரணமடைவதற்கு நாம் நெடுந்தூரம் செல்லவேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப நடவடிக்கைகள் நலந்தருவனவாயுள்ளன. இச்சபைக்கு அதிகாரமளிக்கப்பட்ட பதினைந்து விடயங்களையும் நிர்வகிக்கப் பத்துப் பிரிவுக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் ஒவ்வொன்றிலும் அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் பிரதிநிதித்துவம் பெறுகின்றனர். அனுபவமும், திறமையும் பெற்ற தனியார்துறையினரும் இக்குழுக்களில்உள்ளனர். இக்குழுஒவ்வொன்றிலும்சிரேஷ்ட அரசாங்க ஊழியர் ஒருவர் பிரதிச்செயலாளராகக்கடமையாற்றுகிறார். திட்டங்களை ஒன்றுசேர்ப்பதும். வேலைகளை ஒருங்கிணைப்பதும் மாவட்டச் செயலாளரின் கடமையாகும். ஒருகால் இம்மாவட்டத்திற்கே தனித்துவமானதாகக் கொள்ளக்கூடிய இந்த ஒருங்கிணைப்பு மேலும் ஏற்படக்கூடிய அதிகாரமாற்றத்தினைஉள்ளடக்கக்கூடிய அமைப்பினைக் கொண்டுள்ளது எனக் கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

## நிதிவளம்

நீர்ப்பாசனத்திலிருந்து விவசாயம் ஈறுகவும் கல்வியிலிருந்து சுகாதார சேவை வரையிலும் இப் பதினைந்து விடயங்களும் செறிந்து நிற்கின்றன. அவை ஒரு பரந்த அடிப்படையில் பல்வேறு வழிகளிற் சமுதாயத்தின் வாழ்வில் தாக்கத்தினை ஏற்படுத்தி நின்கின்றன. அபிவிருத்திசபைக்கு பூரண அதிகாரமும், நிதியும் அளிக்கப்பட வேண்டும் எனக் கோரப்படவில்லை. நியாய பூர்வமான நிதி உதவியுடன் முறைமையான அதிகாரங்களினையே நாம் உண்மையில் எதிர்பார்க்கிறோம். அபிவிருத்தி நோக்கங் கட்கெனத் தேசிய வருமானத்தில் உரிய பங்கினைத் தருமாறு கோருவதிலுள்ள நியாயத்தினை ஜனாதிபதிக்கும் அவரது அமைச்சரவைச் சகாக்களுக்கும் நாம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

அரசாங்கம் எமது மகஜரை விரிவாக ஆராய்வதில் ஆர்வம் காட்டி இச் சபையைப் பயனுறுதியுள்ளதாய் ஆக்க உரிய ஆதரவு நல்குமென நான் நம்புகிறேன். எமது அபிலாஷைகளை யதார்த்த பூர்வமாக்குவதற்கான மார்க்கத்தினைக் கடைப்பிடித்தால் மாத்திரமே அபிவிருத்திச் சபை உண்மையிற் செயலாற்றல் வாய்ந்ததாய் அமையும். சட்டத்தில் வரிவிதிப்பு அதிகாரம் அளிக்கப்பட்டுளதாயினும் எமது அதிகாரத்துக்குட்பட்ட அத்தகைய வரிவிதிப்பு எல்லையினை நாம் அடைந்துவிட்டோம் என்பதை நான் ஆணித்தரமாக்க் கூறிவைக்க விரும்புகிறேன். இறைவரியினை அதிகரிக்க மேற்கொள்ளப்படும் எந்தப் பிரயத்தனமும் வளர்ச்சிக்கு இடையூறு விளைவிக்கக் கூடிய எதிர்ப்பினை மாத்திரமே உருவாக்கும். நவீன அரசாங்கங்களெல்லாவற்றிலும், மறைமுக வரிவிதிப்பே பெருமளவிற் செயற்படுகிறது. வியாபார மொத்த வரி, மதுவரி, கூட்டுவருமான

[5-ம் பக்கம் பார்க்க]



துபாயிலுள்ள தன் மகள் அனுப்பிய வெளிநாட்டு உடனுண்டியலை மாற்றுவதற்காக 106 மைல் பிரயாணம் செய்து கொழும்புக்கு வந்த அவளுக்கு பிரயாணக்களைப்பு. கியூவில் நீண்ட நேரம் நின்ற அலுப்பு உண்மையில் பெரும் வேதனை.

அவளைப்போல இன்னும் எத்தனை எத்தனை பேருக்கு இந்த அனுபவம்.

இந்தச் சிரமமெல்லாம் தேவையில்லை. களைப்பு மிகுந்த பிரயாணத்தைத் தவிர்க்கவும், நீண்டதூரம் பணத்தை எடுத்துச் செல்வதனுல் ஏற்படக்கூடிய அபாயத்திலிருந்து விடுவிக்கவும் இலங்கை வங்கி உங்களுக்கு உதவுகிறது

**இலங்கை வங்கியின் எந்தப் பிரதான கிளையிலும் உங்கள் வெளிநாட்டு உடனுண்டியல்களை மாற்றலாம்.**

வங்கியில் கணக்கு வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. அதேவேளை, உடனுண்டியல் எந்த வங்கியின் மேலும் பெறப்பட்டிருக்கலாம். தேவையானது, ஆள் அடையாள அட்டை மட்டுமே. அதனை எடுத்துச் சென்று உங்கள் உள்ளூர் கிளை முகாமையாளரைச் சந்தியுங்கள். அவர் எல்லா உதவிகளையும் செய்வார்

இலங்கை வங்கியில் நடப்புக் கணக்கு அல்லது சேமிப்புக் கணக்கு வைத்திருந்தால் குறைந்த வங்கிக் கட்டணம் செலுத்தி உள்நாட்டு நாணயத்தில் கூடுதலான தொகையைப் பெறுவீர்கள் என்பதையும் மறவாதீர்கள்.

உங்கள் உடனுண்டியல்களை உங்கள் ஊரிலேயே மாற்றக் கூடுமானுல் கொழும்புக்கு ஏன் வரவேண்டும்?

ஆனுலும், நீங்கள் தொடர்ந்து கொழும்பு 1 யோர்க் வீதியிலுள்ள இலங்கை வங்கியின் சர்வதேச பிரிவிலும் மாற்றலாம்.

**வெளிநாட்டு வங்கி உடனுண்டியலை மாற்ற**

# அவளின் அந்தப் பிரயாணம் அவசியம்தானு?

**இலங்கை வங்கி**

BANK OF CEYLON இலங்கை வங்கி

Phoenix

# பயணத்தின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)
வரி, ஆகியவற்றைத் தெரிந்தெடுத்து அபிவிருத்திச் சபைக்கு மாற்றுவதே சிறந்த ஒழுங்கமைப்பாகும். அபிவிருத்திச் சபை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அத்தகைய நடவடிக்கைகள் சாத்தியமாகலாமென்பதால் இதற்குச் செயலுருவம் அளிக்கப்பட வேண்டுமென நான் வன்மையாகத் தூண்டி நிற்க விழைகிறேன்.

## செயற்பரப்பினை விஸ்தரித்தல்

ஒரு சபை, முதலிடம் அளிக்கப்படவேண்டிய தனது அபிவிருத்தி வேலைகளை ஒழுங்குபடுத்தியமைக்க, அம்மாவட்டத்திற்குக் கிடைக்கக் கூடிய பண ஒதுக்கீட்டுத்தொகை எத்துணையதென மத்திய அரசு குறிப்பிடல் வேண்டும். தன் அதிகாரத்திற்குட்படுத்தப்பட்ட பதினைந்து விடயங்களைப் பற்றியும் தேர்ச்சித்திறன் பெறுவதற்கு அபிவிருத்திச் சபைக்குச் சில காலம் செல்லும். ஆயினும் மக்களின் நலனுடன் நெருங்கிய தொடர்புள்ள மற்றைய விடயங்களிற் சபை ஈடுபடுவதை இது தடுக்கமாட்டாது. பெருந்தெருக்கள், மின்சாரம், காட்டுநிலம், சந்தைப்படுத்தல், ஆயுர்வேதம், நெசவு, தெங்குக் கைத்தொழில், பிரதேச அபிவிருத்தி ஆகிய துறைகளில் தனது செயற்பாட்டினை விஸ்தரிக்கச் சபை முனையும்.

## ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித்திட்டம்

அதிக ஆணையுரிமை, அதிகாரம், ஆகியவற்றின் இருப்பிடமாக அபிவிருத்திசபை அமைகின்றபோதுங்கூட, திட்டமிட்ட வளர்ச்சிக்கான அத்திவாரத்தினையிடும் பாரிய பணியில் அது ஈடுபடவேண்டி உள்ளது. அத்திட்டத்தின் அமைப்பினையும் சமநிலையினையும் தீர்மானிக்க, மாவட்டத்தின் குடிசனத்தொகை, அப்பகுதியின் வளங்கள் அதன் அபிவிருத்தி வளம், ஆகிய ஒப்பளவுகள் கவனத்திற்கெடுக்கப்படும்.

யாழ்ப்பாணத்திற்கெனத் தயாரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த கிராமாபிவிருத்தித் திட்டம் ஒன்றுக்கொன்று உறுதுணையாய் உதவக்கூடிய பல பிரிவுத்திட்டங்களை உள்ளடக்கிய பரந்த திட்டமொன்றினை அளிக்க முனைகிறது. யாழ்ப்பாண மாவட்டத்திற்கெனத் தயாரிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கிராமாபிவிருத்தித் திட்டத்தின் தனித்துவத்தைப் பற்றி யான் குறிப்பாகத் தெரிவிக்க வேண்டியுள்ளது. மற்றைய காரணங்களுள், உதவி நன்கொடையளிக்கும் நாடுகளின் கொள்கை ஆக்கங்களுக்கேற்ப மற்றைய மாவட்டங்கள் பலவற்றிற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. உள்நாட்டு உத்யோகத்தர்களுடனும், அல்லது முற்றிலும் உள்நாட்டவரைக் கொண்டிராத வர்த்தக நிறுவனங்களுடனோ இணைந்து செயற்பட்டு வெளிநாட்டுக் குழுவினராலேயே திட்டத் தயாரிப்பும் மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தின் நாடித்துடிப்பினை எந்த ரீதியில் அக்குழுவினர் உணர்ந்துகொண்டார்களோ அதற்கேற்ப மக்களின் தேவைகளை மனதிற் கொண்டே யாழ்ப்பாண மாவட்டத்திற்கான திட்டம் அமைகிறது.

## வெளிநாட்டு உதவி பெற்றுத்தர அரசு முயல வேண்டும்

இத்திட்டத்திற்கு எதிர்பார்க்கப்படும் முதலீட்டுத் தொகை 75 கோடி ரூபாவாகும். ஐந்தாண்டு காலத்திற்குள் இத்தகைய ஓர் முதலீடு, திட்டமிட்ட அபிவிருத்தி என்னும் பேரோடையில் இம்மவட்டத்தைச் சேர்த்துவிடும் என்பது நிச்சயம். எனினும் இத்திட்டத்தைச் சாதனையாக்க அபிவிருத்திச்சபைக்கு வழிவகைகள் எதுவுமில்லை. மத்திய அரசு இதற்கான நிதியை அளிக்கும் எனவும் சபை எதிர்பார்க்கவில்லை. ஆயினும் குருநாகல், மாத்தறை, அம்பாந்தோட்டை, புத்தளம், நுவரேலியா, மாத்தளை ஆகிய பகுதிகள் ஒவ்வொன்றினதும் ஒருங்கிணைந்த கிராமாபிவிருத்தித் திட்டத்திற்கு வெளிநாட்டு நிதிஉதவி அளிக்கப்பட்டது போன்று, எமக்கும் அளிப்பதற்கு முயல வேண்டுமென அரசாங்கத்தை நான் வேண்டுவது நிச்சயமாக நியாயபூர்வமானதாகும். இவ்வேண்டுகோள் சிரத்தையுடன் கவனிக்கப்படுமாயின் வட பகுதி மக்களை அபிவிருத்தி என்னும் போரோடையில் ஒன்றிணையுமாறு அரசாங்கம் விடுத்த அழைப்பு அந்தரங்க சுத்தியானதெனக் கருதப்படும்.

(தொடரும்)

## இன்றைய இசைவிழாவில்

மாலை 5-45 மணி அண்ணாமலை இசைக்கல்லூரி மாணவர்கள் பாட்டு வீணை.

6-30 மணி திருமதி நாகேஸ்வரிப்ரம்மானந்தா பாட்டு, செல்வி பாக்கிய லட்சுமி நடராஜா வயலின் திரு. எம். சிதம்பரநாதன் மிருதங்கம், 7 45 — 9-00 மணி திரு. எல். திலகநாயகம் போல் பாட்டு திரு. உ. இராதாகிருஷ்ணன் வயலின், திரு. எஸ். மகேந்திரன் மிருதங்கம்.

## நடுக்கடலில் தத்தளித்த மீனவர்கள்

லண்டன் மே, 13

நடுக்கடலில் தத்தளித்த 7 பாரத மீனவர்களை பாகிஸ்தான் கப்பல் ஒன்று கரை சேர்த்துள்ளது. இவர்களில் நால்வர் மயக்கமடைந்தநிலையிருந்தனர். 3 பேர் பசியினால் களைப்படைந்திருந்தனர்.

கடந்த மாதம் ஓமானிலிருந்து மோட்டார் படகில் இவர்கள் கடலுக்குப் புறப்பட்டதாகவும், புயலினால் ஏற்பட்ட தாக்கத்தினால், படகில் கசிவு ஏற்பட்டு மூழ்கியதாகவும், கட்டை மரமொன்றில் தத்தளித்ததாகவும், விசாரணையில் தெரியவந்தது. கராய்ச்சிப் பொலிசார் இவர்களுக்குத் தேவையான உதவிகளைச்செய்துள்ளனர். (க)

லண்டன் மே.13

பலஸ்தீனுக்கு சுயாட்சி வழங்குவதுபற்றி புதிய பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இப்பேச்சுவார்த்தையை எங்கு நடத்துவது என்பது பற்றி முடிவு செய்யப்படவில்லை.

ஜெருசலத்தில் இப்பேச்சுவார்த்தையை நடத்தவேண்டும் என்ற இஸ்ரேலின் யோசனையை எகிப்து ஏற்றுக்கொள்ளவில்லை. (க)

### --- யாழ். மாவட்ட ---

# கிராமசேவை அலுவலர்க்கு பொலிஸ் அதிகாரங்கள்

## அரச அதிபர் சுற்றுநிருபம்

(பண்டத்தரிப்பு)

கிராமசேவை அலுவலர்கள் தங்கள் கடமைகளுடன், பொலிசாரின் கடமைகளையும் மேற்கொள்வதற்கான அதிகாரத்தை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தமது பிரிவில் உள்ள சகல கிராமசேவை அலுவலர்களுக்கும் எழுத்து மூலம் வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, கிராமசேவை அலுவலர்களுக்கு இவ்வாரம் அனுப்பிவைத்துள்ள அதிகாரமளிக்கும் கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது;

'1979ம் ஆண்டின் 15ம் இலக்கக் குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை 2ம் பிரிவின் பிரகாரம் கிராம சேவை அலுவலர் பதவியுடன், பொலிஸ் கடமைகளையும் புரிவதற்குத் தங்களுக்கு அதிகாரம் அளிக்கின்றேன்.'

இதில் ஒவ்வொரு கிராம சேவை அலுவலரின் முழுப் பெயரும் குறிப்பிடப்பட்டுத் தனித்தனியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (இ)

## ஆலய நிர்வாக தேர்வு

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை காரைக்காடு ஸ்ரீ வைரவர் சைவபரிபாலன சபையின் புதிய நிர்வாக தேர்வுக்கூட்டம் இன்று இரவு நடைபெறவிருக்கிறது.

திரு. க. செல்லையா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கலைஞர் எஸ். கே. யோகநாதன் 'ஆலயசபை வளர்ச்சியில் மக்கள் பங்கு' பற்றிஉரையாற்றுவார்.

## திருமலையில் நாளையும் மறுதினமும் கம்பன் விழா

(திருகோணமலை)

திருகோணமலைக் கம்பன் கழகம், அகில இலங்கைக் கம்பன் கழகத்துடன் இணைந்து நடாத்தும் கம்பன்விழா, திருகோணமலை இந்துககல்லூரி மண்டபத்தில் நாளை சனிக்கிழமை மாலையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலையும், மாலையும் நடைபெறுகிறது.

முதல்நாள் நிகழ்ச்சி திருமலை எம் பி. திரு. இரா. சம்பந்தன் தலைமையில் நடைபெறும்.

2ம் நாள் காலை நிகழ்ச்சிக்கு திருகோணமலை கம்பன் கழகப் பெருந்தலைவர் திரு. பெ. பொ. சிவசேகரமும், மாலை நிகழ்ச்சிக்கு திருமலை மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. அ. தங்கத்துரையும் தலைமைதாங்குகிறார்கள்.

முதல்நாள் நிகழ்ச்சியின் போது 'வாலிவதையில் இராமன் குற்றவாளியே' என்ற தலைப்பில் வழக்காடு மன்றம நடைபெறும். அம்மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மறுநாள் காலை நிகழ்ச்சியின்போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறை செய்யப்படும்.

மாலை நிகழ்ச்சியின்போது 'இராமனுக்குப் பெருமை சேர்த்ததில் முதலிடம் வகிப்பது யார்? என்ற பொருள் பற்றி ஆராயப்படும். (இ)

### --- ஆங்கில ஆசிரியரின் ---

## இளைப்பாறும் வயதை நீடிக்கக் கோரிக்கை

[கொழும்பு]

ஆங்கில ஆசிரியர்களின் இளைப்பாறும் வயதெல்லையை 65 ஆக நீடிக்கும்படி அகில இலங்கை ஆங்கில ஆசிரியர் சங்கம் பொது நிர்வாகஅமைச்சரைக் கோரியுள்ளது. இவ்வாறு வயதெல்லையை நீடிக்கும் பட்சத்தில் ஆங்கில ஆசிரியர்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டையும் ஓரளவு சமாளிக்க முடியுமென மேற்படி சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

தமது இளைப்பாறும் வயதெல்லையை நீடிக்கக் கோரியிருக்கும் ஆங்கில ஆசிரியர் சங்கம், நீதித்துறை, பல்கலைக்கழக போதனையாளர்கள் ஆகியோரின் இளைப்பாறும் வயதெல்லை 65 வயதாக இருப்பதையும்சுட்டிக்காட்டியுள்ளது. [கி]

## பாடசாலை அபிவிருத்திகளுக்கு

(கொழும்பு)

மகாபொல சந்தைமூலம் திரட்டப்பட்ட 50 லட்சம்ரூபா அந்தத்தப்பகுதி பாடசாலை அபிவிருத்திகளுக்குச் செலவிடப்படவிருக்கிறது.

பாடசாலை ஆய்வுகூடம் கட்டடங்கள், விளையாட்டு மைதானம், ஆகியவற்றை அமைக்க இந்நிதி பயன்படுத்தப்படும். (க

## கல்விச்சேவை போட்டி முடிவுகள்

(கரவெட்டி)

கல்வி அமைச்சின் 'பியவர' கல்விச்சேவை வானொலி ஒலிபரப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கோப்பாய் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள் வருமாறு:

இசை (தனி) செல்வி ந. விஜயநந்தினி (இடைக்காடு மகாவித்தியாலயம் செல்வி பா. அனுசூயா (அச்சுவேலி சென். திரேசா மகளிர் வித்தியாலயம்), செல்வி கே. சண்பகவல்லி (ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயம்).

இசை (குழு): உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயம், இடைக்காடு மகாவித்தியாலயம், அச்சுவேலி மகாவித்தியாலயம்.

பேச்சு: க. நடனபாதம் (அச்சுவேலி மகாவித்தியாலயம்) கே. பாலகிருஷ்ணஐயர் (இடைக்காடு மகாவித்தியாலயம்). மகாதீரன் (அச்சுவேலி மகாவித்தியாலயம் .

கதை: செல்வி சி. கௌசலா (அச்சுவேலி சென். திரேசா மகளிர் வித்தியாலயம்), க. உமாபாலன் (இடைக்காடு மகாவித்தியாலயம்) செல்வி. து. ஜெயந்தி (நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி)

கலந்துரையாடல்:– இடைக்காடு மகா வித்தியாலயம், அச்சுவேலி சென். திரேசா மகளிர் வித்தியாலயம்.

நாடகம்:– அச்சுவேலிசென். திரேசா மகளிர் வித்தியாலயம்.

கவிதை:– இடைக்காடுமகா வித்தியாலயம்.

## அமெரிக்க விஜயம் பற்றி பாரதப் பிரதமர்!

புதுடில்லி, மே 13

தமது அமெரிக்க விஜயத்திற்கான தேதி விரைவில் அறிவிக்கப்படும் என இந்தியப் பிரதமர் கல்கத்தா விமானநிலையத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

உயர் தொழிற்சாலைகளும் விவசாயமுமே நாட்டை முன்னேற்றும் என்றும், தாழ்த்தப்பட்டவர்களின் பொருளாதார நிலையை மேம்படச்செய்வது அவசியம் என்றும் அறிவித்தார்.

அமைதி சூழ்நிலையில்தான் முன்னேற்றம் இருக்கமுடியும் என்றும் அவர் தெரிவித்தார். [இ-க]

## சேவைக்குப் பாராட்டு

(பரந்தன்)

''மக்கள்சேவையே மகேசன் சேவையென்பர், மக்களுக்கு ஆற்றிய பணியைப்பாராட்டாவிட்டால் இப்பணிகளின் மகத்துவம் பெருமையடையாது'' என்று பரந்தன் தபாலக சேவையிலிருந்து விலகிய திரு. எம். ஏரம்பமூர்த்தி, கி ஐயாத்தம்பி, இ. குலசேகரம், எம். கிருஸ்ணபிள்ளை ஆகியோருக்கான பிரியாவிடை உபசாரம் பரந்தனில் நடைபெற்றபோது உரையாற்றிய பரந்தன் தபாலக அதிபர் திரு. எஸ். பராஜசிங்கம் கூறினார்.

திருவாளர்கள் திரு. சின்னத்தம்பி, எஸ். வேதாரணியம் ஆகியோரும் உரையாற்றினர். அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன. அ)

சிறந்த தமிழ் சினிமாப்படங்களை சென்னைத் தொலைக்காட்சியில் பார்க்கவேண்டுமா?
இதோ! ஒவ்வொரு கிழமையும் சிறந்த தமிழ்ப்படங்களை சென்னைத் தொலைக்காட்சியில் பார்த்து மகிழ்வதற்கு உத்தரவாதத்துடன் தொலைக்காட்சி ஏரியல் பொருத்திக்கொள்ள
ஓடர்கள் உடனுக்கு உடன் கவனிக்கப்படும்.

வீனஸ் றெக்கோடிங் றேடியோ வாச் வேக்ஸ்
266/1, ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்) யாழ்ப்பாணம்.

நான்காவது வாரம்
ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
தில்லுமுல்லு

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
T UNDER BALL

வெஸ்லி 17.5.82வரை மானிப்பாய்
தினசரி6–15, 9–15
சனி, ஞாயிறு 2–30
பாக்கியராஜ்–ரதி
புதிய வார்ப்புகள்

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
சிவாஜி–ஸ்ரீதேவி
பட்டாக்கத்தி பைரவன்
(புத்தம்புதிய பிரதி)

சாந்தி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
10–30, 2–30, 6–30, 9–45
காட்சி நேரங்கள் மாற்றப் பட்டமை கவனிக்கவும்
TATSUYA NAKADAI
in
KAGEMUSHA
THE SHADOW WARRIOR
...Action Packed–War Film—
21–5–82. கமல் கடல்மீன்கள் [கலர்]

ராணி (யாழ். நகர்)
தினசரி 10–30, 2–30, 6–15, 9–30
ஜெய்சங்கர் - மனோரமா
பொன்வண்டு

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
2-வது மாதமாக (சில தினங்கள் மட்டும்)
ஸ்ரீ பிரியா, சுபாஷினி, கமல், ரஜனி, நாகேஷ்
இன்னும் பல நட்சத்திரங்கள் நடித்த
நட்சத்திரம்
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
ஹவுஸ் புல்! ஹவுஸ்புல்!!
ஹவுஸ் புல்!!
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
★ கார்த்திக் ★ ராதா
தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)
காட்சி நேரங்கள் குறிப்பிடமுடியாதபடியால்
ஆசனங்களுக்கு முந்துங்கள்.

## கிராமோதய சபைத் தலைவர்கள்

(தலைமன்னார்)

இலுப்பைக்கடவை கிராமோதய சபைத்தலைவராக திரு. சி. சண்முகலிங்கம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்,

இலுப்பைக்கடவை முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலனசபையின் நிர்வாகசபை உறுப்பினராக நீண்டகாலம் பணியாற்றிய இவர் இலுப்பைக்கடவைக் கிராமாவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும், மீனவர் கூட்டுறவுச்சங்கத்தின் செயலாளராகவும், கடற்றொழில் விரிவாக்கச் சங்கத்தின் தலைவராகவும், இந்து இளைஞர் மன்றத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும் இலுப்பைக்கடவை அரசினர் தமிழ் வித்தியாலய அபிவிருத்திச் சபையின் செயலாளராகவும் பணியாற்றிவருகிறார்.

\+ +

(பரந்தன்)

பரந்தன்கிராமசேவையாளர் பிரிவுக் கிராமோதயசபைத் தலைவராக திரு.மு. சுப்பையா ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். நெடுந்தீவை பிறப்பிடமாகக் கொண்ட இவர் பரந்தன் இ.த.க. பாடசாலை முன்னாள் அதிபரும் பரந்தன் பாவனையாளர் சங்கத்தலைவரும் கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினருமாவார்.

\+ +

(பரந்தன்)


அக்கராயன்குளம் கிராமோதயசபைத்தலைவராக ஸ்கந்தபுரம் 2ம் பாடசாலை அதிபர் திரு. ஆறுமுகம் சோமசுந்தரம் பிள்ளை ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் ஸ்கந்தபுரம் விவசாயிகள்சங்கம், ஸ்கந்தபுரம் முருகன் ஆலய பரிபாலனசபை ஆகியவற்றின தலைவருமாவார்.

\+ +

[மன்னார்]

மன்னார்–தாராபும் கிராமோதயசபைத்தலைவராக மன்னார் அல்–அஸ்ஹர் மகாவித்தியாலயத்தில் வர்த்தக ஆசிரியராகக் கடமையாற்றும் ஜனாப் கே. எம். அப்துல்காதர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்

இவர் தாராபுரம் சனசமூக நிலையத்தலைவராகவும், தாராபுரம் பெற்றோர் ஆசிரியர்சங்கம் மன்னார் கல்வித்திணைக்கள கடன் வழங்குசபை ஆகியவற்றின் உறுப்பினராகவும் கடமையாற்றி வருகிறார். (அ)



அண்மையில் நடைபெற்ற ''லங்கெம் டீபொல் டிஷ் வொஷ்'' போட்டியில் கலந்துகொண்ட பல டீபொல் டிஷ் வொஷ் பாவனையாளர்கள் நல்ல பரிசுகளைத் தட்டிக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றார்கள். ''ட்றீம் ஸ்ச்றீபர் கிச்சன்'' முதற் பரிசைப் பெற்ற திருமதி ஈ. டி ரேசலின், லங்கெம் சிலோன் லிமிட்டெட்டின் சந்தைப்படுத்தும் முகாமையாளர் திரு. எஸ். ஏ. பி. விஜயவீரவிடம் பரிசைப் பெற்றுக்கொள்வதை இங்கு காணலாம்.

## இன்றைய பலன்

சித்திரை மாதம் 31ம் திகதி

வெள்ளிக்கிழமை

(14–5–82)

மேடம்: வாகனச் சொந்தக்காரருக்கு வருமானமும் பெருகும், சிலருக்கு அரசாட்சியிலும் ஆர்வம் பிறக்கும். உங்களை முன்னணிக்கு அழைத்துச் செல்லும்கண்ணியமானதினம்.

இடபம்: பெரிய இடத்துச் சிநேகிதம் இன்று ஏற்படலாம். குடும்பத்தில் மகிழ்ச்சிக்கும் இடமுண்டாம். முதியவர் ஒருவர் உமக்கு நல்வழிகாட்டுவார்.

மிதுனம்: வயிற்றுக்கோளாறு தோன்றக்கூடும். எதிரிகளும் காத்திருப்பார்கள். வீட்டிலும் சிறு பிணிகள் தலைதூக்கும். அதிக கவனம் வேண்டும்,

கடகம்: சந்திப்பின்மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வீர்கள். காதலைவசப்படுபவர்களுக்கு கனிவான தினம்.

சிங்கம்: ஏமாற்றம்ஏற்படும். சூழ்ச்சியின் உச்சக் கட்டம் வேதனையில் வீழ்த்திவிடும். ஆழ்ந்த சிந்தனையுடன் காரியத்தில் கண்வைப்பீர்கள்.

கன்னி: நண்பர் ஒருவர் கைகொடுத்து உதவுவார். தெய்வ நம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும். புண்ணிய கருமங்களிலும் ஈடுபடுவீர்கள்.

துலாம்; வாழ்வுப் பாதையில் வளமான திருப்பமும் தென்படும். நீண்டநாள் எதிர்பார்த்த செய்தி இன்றுகிடைக்கலாம். பொன்னான தினம்.

விருச்சிகம்: பதிய பாதையில் கையாளுவீர்கள். விருந்தினர்கள் உங்களைத் தேடிவருவார்கள் எதையும் சிறப்பாகச் செய்வீர்கள். உயர்வுக்கும்இடமுண்டு.

தனு: செய்தொழிலில் நஷ்டம் ஏற்படலாம். விஷமிகள் டனேந்துரையால் ஆத்திரமும் அதிகரிக்கும் பொருள் விடையத்தில் கவனம் வேண்டும்.

மகரம்: அபாயகரமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். தெய்வ நம்பிக்கை சிறந்த பலனைத்தரும். குடும்பப் பிரச்னைகளில் சுமுகமான நிலை தென்படும்.

கும்பம்: குடும்பத்திலும் அமைதி நிலவும் பேச்சு வன்மையால் புகழும் கிடைக்கும். வரவிலும் உயர்வு காணும். பொன்னான தினமாகும்.

மீனம்: சகோதரவழியால் மனதில் சஞ்சலமும் தோன்றக்கூடும். உற்சாகமாக இருக்கவும். வாத ரோகத்துக்கும் இடமளியாது நடக்கவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## 10வது ஆண்டு விழா இன்று

(கரவெட்டி)

வலிகாமம் கிழக்கு (தென் பகுதி) தெங்கு–பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் 10வது ஆண்டு நிறைவு விழா, நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் திரு. சீ. செல்லத்துரை தலைமையில் கோப்பாய் சென். மேரிஸ் ஆலய முன்றலில் நடைபெறவுள்ள இவ்விழாவில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு. நடராசா கலந்துகொள்கிறார். சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரம், உடுப்பிட்டி எம். பி. திரு. த இராசலிங்கம், பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா, மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர்களனா திருவாளர்கள் சு. நடேசு, ந இராசேந்திரன், எஸ். சின்னத்துரை, உரும்பராய் பங்குத் தந்தை வண பிதா ஜி. ஆர். நேசநாயகம் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

விழாவையொட்டி இன்று மாலை உரும்பராய் சென். மைக்கல் சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் கழகங்கள், சனசமூகநிலையங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளும், நாளைக் காலை மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டப் போட்டிகளும் இடம் பெறவுள்ளன.

ராஜா (யாழ்ப்பாணம்)
14-5-82 இன்று முதல்
தினசரி 10-30, 2-30, 6-15 இரவு 9-30
★ ரஜனிகாந் ★ விஜயன் ★ கராத்தே மணி
★ சுந்தரராஜன் ★ சுஜாதா ★ ரதி
★ சுருளிராஜன் ★ தேங்காய் சீனிவாசன்

நடித்த

தேவர் பிலிம்ஸ்
அன்புக்கு நான் அடிமை
(ஈஸ்ட்மன் கலர்)
இந்தியாவில் 150 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச் சித்திரம்

றீகல் [யாழ்ப்பாணம்]
தினசரி 10.30, 2 30 6.15 9 30
விநோத் கன்னா நடித்த
குச்சே டாக்
Kuchchai Daag
பல நாட்களுக்குப் பின்
இந்தி ரசிகர்களுக்கு
பெருவிருந்து

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

# வரி விளம்பரம்

## தேவை

அனுபவம் வாய்ந்த சாரதி (Van Driver) ஒருவர் தேவை. தக்க சான்றிதழ்களுடன் 16–5–82க்கு முன் நேரில் தொடர்புகொள்ளவும். நீயூட்டன் ஏஜென்சி, குறுக்கு றேட், நீர்வேலி வடக்கு. 3171

வாகன விற்பனையாளர் தேவை. யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனத்தின் வாகன விற்பனையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள்கோரப்படுகிறது. மாதாந்த வேதனமும் விற்பனை கமிஷனும் கொடுக்கப்படும். தகமை, அனுபவம், விரும்பப்படும். நியமிக்கப்படுபவர் ரூபா 5000/– பிணைப்பணமாக கட்டவேண்டும். விளம்பர இல. 170, C/O ஈழநாடு யாழ்ப்பாணம். 3170

## பின்னுறுதிக் கட்டளை

சாவகச்சேரி
மாவட்ட நீதிமன்றம்

கிளிநொச்சி, டிப்போ றேட், கமலினி ஸ்ரோர்ஸ்யைச் சேர்ந்த காலஞ்சென்ற ஐயம்பிள்ளை அமிர்தலிங்கம் என்பவரின் மரணசாதனமில்லாதசொத்துக்கள் விடயத்தில்
— காலமெய்தியவர்

ஐயம்பிள்ளை கைம்பெண்
அன்னமுத்து,
கமலினி ஸ்ரோர்ஸ்,
டிப்போ றேட்,
கிளிநொச்சி, — மனுதார்

வழக்கு இலக்கம்: 206/T

இவ்வழக்கு 1982–ம் ஆண்டு சித்திரை மாதம் 5–ம் திகதி சாவகச்சேரி மாவட்ட நீதிபதி உயர்திரு எம். எச். காரியப்பர் முன்னிலையில் மனுதார் சார்பில் அவரின் சட்டத்தரணிகள் ''பரராஜசிங்கமும், அம்பிகைபாலனும்'' என்னும் நாமத்தில் செயலாற்றும் திருவாளர்கள் முத்தையா பரராஜசிங்கம், செல்லப்பா அம்பிகைபாலன் ஆகியோர் சமூகமாய் இருக்க மனுதாரின் மனு, சத்தியக்கூற்று மற்றும் அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் வாசிக்கப்பட்டு மனுவிலும், சத்தியக் கூற்றிலும் உள்ள கூற்றுக்கள் முதல் தோற்றத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதென நீதிமன்றம் திருப்தி அடைந்ததன் மேல் பின்வருமாறு கட்டளை இடப்பட்டுள்ளது.

இக்கட்டளைக்கு மாறுன காரணங்கள் ஏதும் இருப்பின் 1982ம் ஆண்டு வைகாசிமாதம் 26ந் திகதி அல்லது அதற்கு முன்பாக குறித்த மனுதாரினுல் அல்லது வேறு அக்கறையுள்ளவரினுல் காட்டப்பட்டால் அன்றி மனுதார் மேற்படி காலஞ்சென்றவரின் தாயார் என்ற முறையில் மரணச்சொத்து நிர்வாகப் பத்திரம் பெறுவதற்கு உரித்துடையவர் என்று பிரகடனப்படுத்தப்பட்டு அவ்வண்ணமே அது அவருக்கு வழங்கப்படும் என்று இத்தால்கட்டளை இடப்படுகிறது.

1982–ம் ஆண்டு சித்திரை மாதம் 5ந் திகதி
கையொப்பம்
எம். எச் காரியப்பர்,
சாவகச்சேரி மாவட்ட நீதிபதி

தயாரித்த பிரதி
உறுதிப்படுத்தப்பட்டது.

தயாரித்தவர்கள்:
பரராஜசிங்கமும்,
அம்பிகைபாலனும்
மனுதாரின் சட்டத்தரணிகள்
3149

## விற்பனைக்கு

நாயன்மார்க்கட்டு இராமநாதன்வீதி, இல. 13ல் இரண்டு பரப்புக் காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு. மேற்குறித்த விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 3175

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட
நீதிமன்றத்தில்

சிவில் நடைமுறைச் சட்டத்தின் 529 (1)ம்பிரிவின் கீழ் செய்யப்படும் விண்ணப்பம் சம்பந்தமான விடயத்திலும்

யாழ்ப்பாணம் முஸ்லீம் வட்டாரம் நாவலர் வீதியைச் சேர்ந்த சாமுநெய்னு முகம்மது மீரா சாகிப் மகள் சபீபா என்பவரின் மரணசாதனம் சம்பந்தமான விடயத்திலும்
–மரணமெய்தியவர்

மரணசாதனம் )
நியாயாதிக்கம் ) இல. 3669

சாமு நெய்னு லெப்பை முகம்மது மீரா சாகிப் கைம்பெண் சுந்தான் முகிதீன் நாச்சியா, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1982ம் ஆண்டு வைகாசி மாதம் 6ம் திகதி அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக்கட்டளைப்படி,
(ஒப்பம்)
தா. குலஞானம்,
பதிவாளர்.

1982ம் ஆண்டு வைகாசி மாதம் 6ம் திகதி.

தயாரித்தது
(ஒப்பம்)
சி. சிவனேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.
3166

## இரத்தினக்கல் மூலம் 63 கோடி ரூபா வருமானம்

(கொழும்பு)

இலங்கைக்கு இரத்தினக் கல் விற்பனைமூலம் 63கோடிரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஆபரணங்கள் ஏற்றுமதிமூலம் 1 கோடி 20 லட்சம ரூபா வருமானம் கிடைத்ததாக அரசாங்க இரத்தினக்கல் கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்தார். (க)

## 10கோடி டாலர் கடனுதவி

(கொழும்பு)

வெளிநாட்டு வங்கிகளின் கூட்டுதொடர்பில்இலங்கைக்கு 10 கோடி டாலர் கடனுதவி கிடைத்துள்ளது. லண்டனில் தங்கியுள்ள நிதி அமைச்சர் திரு. ரொனிடிமெல், இக்கடனைப் பெறுவதற்காக, வங்கித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினுர்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட
நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் முஸ்லீம் வட்டாரத்தைச் சேர்ந்த ஏ. பி. ஒழுங்கையில் வசித்த காலஞ்சென்ற அப்துல்அசீஸ் என்பவரின் மரண சாதனமற்ற மரணச் சொத்துக்கள் சம்பந்தமான விடயத்தில்
–மரணமெய்தியவர்

அப்துல் அசீஸ் தாஜுன்
ஏ.பி.ஒழுங்கை, முஸ்லிம் வட்டாரம், யாழ்ப்பாணம்.
மனுதார்

மரணச்சொத்து )
நியாயாதிக்கம் ) இல. 3666

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக / மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டு உள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள்எவரும் 1982ம் ஆண்டு ஜூலை மாதம் 2ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
(ஒப்பம்)
தா. குலஞானம்,
பதிவாளர்.

1982ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 27ம் திகதி.

தயாரித்தது
ஒப்பம்)
த. சண்முகராஜா,
மனுதாரின் சட்டத்தரணி.
3167

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# கொழும்பில் நாளை முதல் 21 வரை யாழ். நூலகவாரம்

[கொழும்பு]

யாழ். நூலகவாரம் கொழும்பில் நாளை சனிக்கிழமை முதல் 21ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

யாழ். மாநகரசபை முதல்வர் திரு. இராசா விசுவநாதன் நூலகவாரத்தையொட்டி, முதலாவது கொடியை கொழும்பு மாநகர முதல்வர் திரு. சிறிசேன குரேக்கு வழங்கி நூலக வாரத்தை கொழும்பில் ஆரம்பித்துவைப்பார்.

நூல்களை அன்டளிப்புச் செய்யவிரும்புவோர் அதனை கொழும்பு சரஸ்வதி மண்டபத்திலகையளிக்கலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ம–வெ)

# 'திருமுறைகள் ஆலயங்களில் வளர்ச்சிபெற வேண்டும்''

(சரவணை)

''ஆதியும் அந்தமுமில்லாத பழம்பெரும் சைவசமயத்திற்கு திருமுறைகள் நற்றமிழ் செல்வங்களாகும். இவற்றைப் போற்றிப்பாதுகாப்பது நமது கடமை. சைவ ஆலயங்களில் திருமுறைகளுக்கு உகந்தஇடம் கொடுக்கப்படவேண்டும். திருமுறைகள் பாதுகாக்கப்படாவிட்டால் வடமொழி தான் தனித்துவம் பெறும். வடமொழியுடன் தென்மொழி திருமுறைகளையும் ஆலயங்களில் வளர்ச்சிபெற நாம்பணி புரியவேண்டும்''.

புங்குடுதீவு– கண்ணகைபுரம் சைவ இளைஞர் சங்கத்தினரால் கூட்டப்பட்ட சைவசமய பிரசாரக் கூட்டத்தில் திருமுறைகள்பற்றி உரை நிகழ்த்திய புலவர் ஈழத்துச் சிவானந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கண்ணகை அம்மன் ஆலய அன்னதான மண்டபத்திற்கு அருகாமையில் ஆசிரியமணி திரு க. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் புலவர் மேலும் பேசுகையில், திருவிழா நாட்களில் டெலிவிஷன் காட்சிகள் காட்டப்படுவதைப் பலமாகக் கண்டித்தார். ஆத்மீக, சமய சிந்தனைகளைக் குழப்பி இளைஞர்களை டெலிவிஷன் தப்பான வழிகளில் கொண்டு செல்கிறது என்றும் திருவிழா நாட்களில் திருமறைகள் வளர்ச்சி பெறத்தக்க பணிகளை மேற்கொள்ளுதல் சிறப்பானதாகுமென்றும் கூறினுர்.

சைவ சித்தாந்த வித்தகர் வித்துவான்பொன். கனகசபை, சிவஸ்ரீ ப. கணேசானந்தக் குருக்கள் ஆகியோரும் பேசினர்.

சைவத்தமிழறிஞரும், 'சிவ தொண்டன்' ஆசிரியரும், அகில இலங்கை சேக்கிழார் மன்ற அமைப்பாளருமானவித்துவான் கே. கே. நடராசனின் மறைவுக்கும் இக்கூட்டத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

## வைத்தீஸ்வரா விளையாட்டுப் போட்டி நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

வித்தியாலயத்தின் இளைப்பாறிய உப அதிபரும் அதன் அபிவிருத்திச் சங்கத்தின் உப தலைவருமான திரு. எஸ். பன்னீர்ச்செல்வம் பிரதம விருந்தினராக கலந்துகொள்கிறுர். திருமதி பன்னீர்ச்செல்வம் பரிசில்களை வழங்குவார். [கி]

## பொலிஸ்தகவல் நிலையங்கள்

(கொழும்பு)

கொழும்பிலும் தங்காலையிலும் பொலிஸ் தகவல் நிலையங்கள் அமைக்கப்படவிருப்பதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

முன்னுள் குற்றவாளிகளின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காகவே இந்நிலையங்கள் அமைக்கப்படவிருக்கிறது. (க)

## நாளை கட்டிடத் திறப்பு விழா

[அரியாலை]

யாழ்ப்பாணம் புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் புதிய கட்டிடத் திறப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இவ் வைபவத்தில் அதிவந். யாழ். ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை புதிய கட்டிடத்தை ஆசீர்வதித்து வைப்பார்

## புதிய அமைச்சரின் விருப்பம்

கொழும்பு)

''இந்த நூற்றுண்டின் இறுதிக்கிடையில் சகல மக்களுக்கும் சுகாதார வசதி கிடைக்க வேண்டும். அனைவருக்கும் சுகாதார வசதியைப் பெற்றுக் கொடுப்பதே எனது இலட்சியமாகும்.''

இவ்வாறு புதிய சுகாதார அமைச்சராகப் பதவியேற்றுள்ள டாக்டர் ரஞ்சித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.
(வெ)

## வெற்றுச்சாக்கு விளம்பரம்

விசுவமடுக்குளம் வா. தி. வி. கூட்டுறவுச் சங்கத்தில் கீழ்காணும் வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. எதிர்வரும் 20–06–82க்கு முன்னர் ரூபா 10/– மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளவும்.

கேள்விப்பத்திரம் 26–05–82–ந் திகதி பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் பின் வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

### சாக்குகளின் விபரம்

நல்லது

| | |
|---|---|
| 1. 2 புசல் சாக்கு | 1170 |
| 2. மாச்சாக்கு 3 புசல் | 35 |
| 3. மல்லிச்சாக்கு 3½ புசல் | 07 |
| 4. சீனிச்சாக்கு தரம் I | 51 |
| 5. சீனிச்சாக்கு தரம் II | 71 |
| 6. அரிசிச்சாக்கு 3 புசல் நீலச்கோடு | 49 |
| மொத்தம் | 1383 |

பழுதடைந்தவை

| | |
|---|---|
| 2 புசல் சாக்கு | 31 |
| 3 புசல் மாச்சாக்கு | 08 |
| சீனிச்சாக்கு தரம் II | 04 |
| 3 புசல் அரிசிச்சாக்கு நீலக்கோடு | 14 |
| மொத்தம் | 57 |

பொதுமுகாமையாளர்,
வி/வாலிப விவசாயத் திட்ட கூட்டுறவுச் சங்கம்,
விஸ்வமடுக்குளம்.

06–05–82. (3162)

## பாராளுமன்ற...

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கும்கூட தேசிய உடையில் செல்வது தடுக்கப்படவில்லையே!

ஏனைய தமிழ்ப் பகுதி மாவட்ட சபைகளுக்கு யாழ்ப்பாண மாவட்ட சபை ஒரு முன்மாதிரியாகத் திகழ வேண்டும், ஏன் சிங்களப் பகுதியிலுள்ள அபிவிருத்தி சபைகளுக்கும் கூட இதன் செயற்பாடுகள் முன்மாதிரிகாட்ட முடியும்.

இந்த வைபவ ரீதியிலான அமர்வுக்கு பத்திரிகை நிருபர்களுக்கு அழைப்புகள் அனுப்பியிருந்தார்கள் செய்தி எடுக்க. நல்லது. பத்திரிகை ஆசிரியர்களையும் அழைத்திருக்கலாமே. கொழும்பில் அப்படித்தான் செய்கிறார்கள்.

* * *

நடந்து முடிந்த உலகஇந்து மாநாட்டின் சூடு தணியும் முன்னரே பலவிதமான கருத்துக்கள் அதுபற்றி அடிபடுகின்றன.

இந்து முறைப்படி சுவாமி தேரில் இருந்து இறக்கப்படும் போதுதான் பச்சை சாத்துவது வழக்கம். பெரியோர்களைக்கௌரவிப்பதாயின்வெண் பட்டு, பொன் பட்டு அல்லது பட்டுப் பீதாம்பரம் என்று அழைக்கப்படும் பொன்னாடையைப்போர்த்துவார்கள். நமது இந்துசமய அலுவல்கள் அமைச்சர் நம் நாட்டு ஜனாதிபதியைக் கௌரவிக்க, பச்சைப் பட்டாடையைப் போர்த்தியதில் அரசியல் 'நெடி' வீசுவதாகக் கதை அடிபடுகிறது

ஐக்கிய தேசியக் கட்சியின் நிறமான பச்சையை அமைச்சர் ஏன் தேர்ந்தெடுத்தார் என்றே விளங்கவில்லை. இப்படியான கருத்துக்கள் உருவாகும் என்பதை அமைச்சரால் முன்கூட்டியே உணரமுடியவில்லை அல்லது ''எவரும் எப்படியும் நினைத்துவிட்டுப் போகட்டும்'' என்ற மனப் போக்காக இருக்கலாம். மகாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தவர்களைவிட அதிகமானவர்கள் வந்திருந்ததால் படிகளிலும், வாசல்களிலும்கூடப் பார்வையாளர்கள் நிற்க நேர்ந்ததாம்.

## இரவும் பகலும் என்னை...

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

டிய கயிற்றினால் என்னைத் தலைகீழாகத் தொங்கவிட்டார்கள். பின்னர் எனக்கு மிளகாய்த் தூள் புகைபிடித்தார்கள்.

''ஆனையிறவு முகாமில் என்னை பத்துத்தடவைகள் தலைகீழாகத் தொங்கவிட்டிருப்பார்கள். கைகள் பின்புறமாக விலங்கிடப்பட்ட நிலையில் ஐந்து தடவைகள் தொங்கவிடப்பட்டிருப்பேன்.

''இவ்வழக்கின் 2ம் எதிரி ஜெகனை எனக்கு முன்னர் தெரியாது. கடந்த வருடம் மே மாதம் முதலாம் திகதி நான் தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருந்த நிலையிருந்தபோது ஒரு அதிகாரி ஜெகனைக் கூட்டிக்கொண்டுவந்து இவரைத் தெரியுமா என்று கேட்டார்.

பிரதிசொலிசிஸ்டர் ஜெனரல் திரு. திலக் மாரப்பன குறுக்கு விசாரணை செய்கையில்தேவன் தெரிவித்ததாவது:

''ஆனையிறவு சடுப்பு முகாமில் வைத்து எனது வாக்குமூலத்தை வாசித்துக்காட்டும்படி கேட்டபோது பொலிசார் முடியாதென்று கூறினர் நான் அதில் கையொப்பமிட்டேன்.

''குட்டிமணி தன்னைத் தானே சுட்டது எனக்குத் தெரியாது. பனாகொடை இராணுவ முகாமிற்குக் கொண்டு வரப்படுவதற்காக விமானத்தில் என்னை ஏற்றிய போதுதான், குட்டிமணிக்கு தலையில் காயமிருந்தது தெரியும்.

''யாழ். பொலிஸ் நிலையத்தில்வைத்து ஏ. எஸ். பி. நவரத்தினராசா ஒரு தடவை என் சேட்டைப்பிடித்து உலுப்பினார். அவர் என்னைத் தாக்கவில்லை''

சட்டத்தரணி எஸ். உருத்திரமூர்த்தி குறுக்குவிசாரணை செய்தபோது தேவன் தெரிவித்ததாவது:

''இராணுவத்தினர் என்னை ஒருபோதும் தாக்கவில்லை. பொலிசார்தான் தாக்கினார்கள்'' என்றார். ம-செ

## 'பத்து இரவுகள்' இன்று ஆரம்பம்

[அரியாலை]

சர்வதேச நற்செய்திப் பாடகரின் 'புரட்சிகரமான பத்து இரவுகள்' நிகழ்ச்சி யாழ். திறந்த வெளி அரங்கில் இன்று வெள்ளி தொடக்கம் 23-ந் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

விரக்தி கொண்ட உள்ளங்களுக்கும் வியாதியால் பீடிக்கப்பட்டோருக்குமாக தெய்வீக விடுதலை கோரி மன்றாட்டுக்கள் இடம் பெறும். (அ)

## விடுதி வசதி

[மாவிட்டபுரம்]

''காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியை விடுதி வசதியுள்ளகல்லூரியாகஅபிவிருத்தி செய்து உதவ வேண்டும்.''

இவ்வாறு கல்லூரியின் அதிபர் திரு. இ. க. குலசேகரன் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

கல்லூரிப் பரிசளிப்பு விழா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றசமயம் அதற்குதலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் இப்படிக் கோரினார்.

எதிர்க்கட்சிமுதல்வரும்காங்கேசன்துறை பிரதிநிதியுமான திரு. அ. அமிர்தலிங்கம் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். அவரிடமே மேற்படி வேண்டுகோளை விடுத்த அதிபர் மேலும் கோரியதாவது:

கல்லூரியின் மாணவர்தொகைக்கு ஈடுசெய்யும்வகையில் பழுதடைந்து இடிந்து விழும் நிலையிலுள்ள மண்டபங்களை இடித்து புதிய மண்டபங்களை அமைக்கஉதவவேண்டும்.

## அமைச்சர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

மூன்றும்கட்ட வேலைத்தள முன்னேற்றம்பற்றி அறிந்து கொண்டார்.

அமைச்சரின் விஜயத்தை யொட்டி இப்பகுதியில் பொலிஸ் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டதுடன், பொலிஸ் ரோந்தும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## தமிழரசர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மகிழ்வழிப்பதாக இச்சான்றுகள் அமையலாம் என்று தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து தொல்லியல் ஆய்வாளர் கருத்துத் தெரிவிக்கையில், இவ்விடப் பெயரில் காணப்படும் 'வளை' என்னும் தமிழ்ச்சொல் 'கோட்டை' என்று பொருள் தருவதாகவும், பாதுகாப்பிற்காக வளைத்துக் கட்டப்படுவதே 'வளை' என்றும் இது இன்றும் பேச்சு வழக்கில் 'எலிவளை' 'யல்வளை' என வருவதாகவும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண இராச்சிய காலத்திற்குரிய குடியிருப்பு போக்குவரத்து அமைப்பு முறையில் இக்கோட்டை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருப்பதாகவும், இராசதானியாகிய நல்லூரில் இருந்து, வடமராட்சி, பச்சிலைப்பள்ளி போன்ற இடங்களைகட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கும், பருத்தித்துறை- கச்சாய் பெருவீதியினைக் கட்டுப்படுத்தவும் இக்கோட்டை முக்கியமானதாக இருந்திருக்கலாம் என்றும் இவர் மேலும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

முறையானதொருமேலாய்வு முயற்சியின் மூலம் கோட்டையின் அமைப்பு முறையினைப் புனரமைத்து அறிய முடியும் என்றும், இந்த இடத்தில் தற்பொழுது தோட்டம் செய்பவர்களுக்கு இடையூறுதராத வகையில் இக்கோட்டையின் எஞ்சிய பகுதியினைப் பாதுகாப்பது சாத்தியமானதென்றும், இப்பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.


### ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 2-3-1898 - மறைவு: 25-4-1981



அச்சுவேலியை பிறப்பிடமாகக் கொண்டவரும், ஓய்வுபெற்ற ஹற்றன் வங்கி சிறாப்பரும் முன்னைநாள் ஹற்றன் இந்து மகாசபைத் தலைவருமான சின்னத்தம்பி வெற்றிவேலு அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலி.

அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய், சத்தியத்தின் இருப்பிடமாயிருந்த எங்கள் அன்புத் தந்தையே; எமை ஆறாத் துயரில் ஆழ்த்தி, மீளாத் துயில்கொள்ளும் எமது அன்புத்தெய்வமே; நீங்கள் முருகன் சந்நிதானத்தில் என்றென்றும் மங்காத ஒளிச்சுடராய் பிரகாசிக்க எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறோம். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

3180



### மரண அறிவித்தல்

ச. ஜெயரட்ணம் (ஜெயம்)

ச. ஜெயரட்ணம் (ஜெயம்) காலமானார். இவர் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும்,,பிரேமா (அபுதாபி), சுசி (அபுதாபி), லதா, சீலன், சந்திரன், நிர்மலா, சிவகுமார் ஆகியோரின் அன்புத்தந்தையும், பேபி, குருநாதி, ராசன், சர்வேஸ்வரி, மிதினேஸ்வரி, ஜெகதீஸ்வரி, சரோ, கலா ஆகியோரின் சகோதரரும், திரு. வன்னியசிங்கம் (குரும்பசிட்டி) அவர்களின் மருமகனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (14-5-82) இன்று மாலை 493, கஸ்தூரியார் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

3181



### லேத் இயக்குநர் தேவை

மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள லேத் இயக்குநர் (Lathe Man) தேவை.
சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.
தகுதிக்கேற்ற சம்பளம் கொடுக்கப்படும்.

**சேவி கிளாஸ் அன்ட் மெட்டல்வேக்ஸ் நீர்வேலி.**

3084



### மிகவும் குறைந்த விசேட விமானக் கட்டணங்கள்

**யாழ்ப்பாணத்தில் மக்கினொன்ஸ்** வழங்குகிறது

★ **சிங்கப்பூர்** கூட்டாகச் செல்வோருக்கு (GROUP TICKETS) மிகவும் கூடிய கழிவுடன் மற்றும் ✲ மத்திய கிழக்கு ✲ லண்டன்

**உலகின் எப்பாகத்துக்கும் விரும்பிய விமானத்தில் விமான டிக்கட்**

✲ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரதிநிதிகளான எம்மிடம்

**வங்கியில் அறவிடும் அதே கட்டணத்தில் பிரயாணக் காசோலைகள்** (TRAVELLERS CHEQUES) நாடுங்கள்

**மக்கினொன்ஸ் ட்ரவல் சேவிஸ்(சிலோன்) லிமிட்**

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த: பெ. எண். 92, தொலைபேசி:8154



### யாழ்ப்பாண மக்களுக்கோர் மகிழ்வான செய்தி!

ஆவலுடன் எதிர்பார்த்திருந்த

**TELEFUNKAN றெலிபங்கன்**

கறுப்பு - வெள்ளை - கலர் தொலைக்காட்சிப் பெட்டிகள் மலிவாக விற்பனையாகின்றன

மேலதிக விபரங்களுக்கு:

**மகாராஜா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்.**

122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 8267


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் மே மீ 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81. Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.